பூமி: 30 சுற்று: 290 ஆடி 12

# தினபூமி


thinaboomi.com

TN-TVL/25/2012-2014

நெல்லை, திங்கள், ஜூலை 28, 2025

▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00



**போர் நிறுத்த பேச்சுவார்த்தைக்கு தாய்லாந்து-கம்போடியா ஒப்புதல்: அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு**

.2-ம் பக்கம்

**3 முதல் 12-ம் வகுப்பு வரை பள்ளி மாணவர்களுக்கு ஆபரேஷன் சிந்தூர் பாடம்**

...3-ம் பக்கம்

**இங்கிலாந்து மண்ணில் இந்திய வீரர்கள் யாரும் செய்யாத சாதனை; புதிய வரலாறு படைத்த சுப்மன் கில்**

...6-ம் பக்கம்





● சென்னை அப்போலோ மருத்துவமனையில் சிகிச்சைப்பெற்று நேற்று இல்லம் திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலினை மருத்துவமனை வளாகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், அமைச்சர் பெருமக்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் ஆகியோர் வரவேற்றனர்.

### 6 நாட்கள் தொடர் சிகிச்சைக்கு பிறகு வீடு திரும்பினார்;

# தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை விரைந்து விடுவிக்க வேண்டும்

## பிரதமர் மோடியிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 28-

**முதல்வர் மு.க.ஸ்டாலின் 6 நாட்கள் தொடர் சிகிச்சைக்கு பிறகு நேற்று மாலை மருத்துவமனையில் இருந்து வீடு திரும்பிய நிலையில், தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை விரைந்து விடுவிக்க வேண்டும் என்று பிரதமர் மோடியை அவர் வலியுறுத்தியுள்ளார்.**

**அரசு பணிகளை...**

முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 21-ம் தேதி நடைபயிற்சியில் ஈடுபட்டபோது, அவருக்கு திடீரென தலைசுற்றல் ஏற்பட்டது. இதையடுத்து, அவர் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவாறே முதல்வர் மு.க.ஸ்டாலின் அரசு பணிகளை மேற்கொண்டு வந்தார். இதற்கிடையில், முதல்வருக்கு இதயத்துடிப்பில் சில வேறுபாடுகள் இருந்தது கண்டறியப்பட்டது. பின்னர், ஆஞ்சியோகிராம் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டதாக அப்பல்லோ ஆஸ்பத்திரி நிர்வாகம் அறிக்கை வெளியிட்டது.

**மருத்துவமனை அறிக்கை**

இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் நலமாக உள்ளார் என்றும், அவர் நேற்று மாலை சிகிச்சை முடிந்து டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என்றும் அப்பல்லோ மருத்துவமனை அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில், "அப்பல்லோ மருத்துவமனையில் (கிரீம்ஸ் சாலை) மருத்துவர் செங்குட்டுவேலு அவர்களின் தலைமையிலான மருத்துவ வல்லுநர் குழு அளித்த சிகிச்சை முடிந்து முழுமையாக குணமடைந்த முதல்வர், (நேற்று) மாலை வீடு திரும்ப உள்ளார்.

முதல்வர் நலமாக இருக்கிறார். 3 நாட்கள் இடைவெளிக்குப் பின் வழக்கமான பணிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

**உற்சாகமாக வரவேற்பு**

இந்த நிலையில், சிகிச்சை முடிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுள்ளார். கடந்த திங்கள்கிழமை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், 6 நாட்களுக்கு பிறகு நேற்று வீடு திரும்பினார் மருத்துவமனையில் இருந்து காரில் புறப்பட்ட முதல்வரை வழிநெடுகிலும் தொண்டர்கள் உற்சாகமாக வரவேற்றனர்.

**பிரதமரிடம் கோரிக்கை**

இதற்கிடையே தமிழக மக்களின் உணர்வுகளுக்கு பிரதமர் மதிப்பளிப்பார் என நம்புகிறேன் என பிரதமர் மோடிக்கு அளித்துள்ள கோரிக்கை மனுவை சுட்டிக்காட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு வெளியிட்டுள்ளார். இதில் அந்த மனுவில் தமிழகத்திற்கான மெட்ரோ ரயில் திட்டங்கள் மற்றும் கல்விநிதியை உடனே விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:- தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக்கான நிதி, ஏழை - நடுத்தர மக்களின் போக்குவரத்துக்காக ரயில் திட்டங்கள், மீனவர்களின் வாழ்வாதாரம், சேலம் பாதுகாப்புத் தொழிற்பூங்கா ஆகியவற்றை வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை மனு அளித்துள்ளோம். மக்களின் உணர்வுகளுக்கும் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மதிப்பளித்து உரிய தீர்வினைப் பிரதமர் வழங்குவார் என்று நம்புகிறேன். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

**அமைச்சர் நேரில் மனு**

முன்னதாக தமிழகம் வந்த பிரதமர் மோடியிடம் 5 கோரிக்கைகள் அடங்கிய மனு அளிக்கப்பட்டு உள்ளது. முதல்வர் ஸ்டாலின் சார்பில் தமிழக அரசின் கோரிக்கை மனுவை அமைச்சர் தங்கம் தென்னரசு பிரதமர் மோடியிடம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

### மதுரை மெட்ரோ திட்டத்திற்கான

# நிதியை விரைந்து ஒதுக்கீடு செய்ய பிரதமரிடம் அமைச்சர் நேரில் மனு

மதுரை, ஜூலை 28-

**மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கான ஒப்புதல், நிதி ஒதுக்கீட்டை விரைந்து வழங்கவேண்டும் என, தூத்துக்குடிக்கு வந்த பிரதமர் மோடியிடம் தமிழக அரசு சார்பில், அமைச்சர் தங்கம் தென்னரசு மனு கொடுத்தார்.**

மதுரையில் முதல் கட்டமாக திருமங்கலம் - ஒத்தக்கடை வரை 32 கிலோ மீட்டர் தூரத்துக்கு 'மெட்ரோ ரயில் திட்டம்' அமல்படுத்தப்படுகிறது. இதற்கு தமிழக அரசு ஒப்புதல் அளித்து அதற்கான திட்ட மதிப்பீடும் தயாரித்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதலுக்கு காத்திருக்கும் நிலையில், இத்திட்டத்திற்கான நில ஆர்ஜிதம், மின்சாரம், போன்ற ஆயத்த பணிகளை முன்கூட்டியே மெட்ரோ திட்ட அதிகாரிகள் ஏற்கெனவே தொடங்கினர்.

இந்நிலையில் தூத்துக்குடி விமான நிலைய தொடக்க விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். அப்போது, தமிழக அரசு சார்பில், மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒப்புதல், உரிய நிதி ஒதுக்கீடு , பல்வேறு தமிழக வளர்ச்சித் திட்டத்திற்கான நிதியை வழங்குதல் போன்ற கோரிக்கைகள் அடங்கிய மனுவை தமிழக அமைச்சர் தங்கம் தென்னரசு பிரதமரிடம் நேரில் வழங்கினார்.

இது குறித்து மதுரை மெட்ரோ நிறுவன திட்ட இயக்குநர் அரச்சுனன் கூறியது: தூத்துக்குடிக்கு வந்த பிரதமரிடம் மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒப்புதல் மற்றும் மத்திய அரசின் 50 சதவீத நிதியை விரைந்து வழங்க அழுத்தம் கொடுக்கும் விதமாக தமிழக அரசு சார்பில் கோரிக்கை மனு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான மத்திய அரசின் ஒப்புதல், நிதி ஒதுக்கீடு விரைவில் கிடைக்கும் என, எதிர்பார்க்கிறோம் என்றார்.

# ராஜராஜசோழன், ராஜேந்திரசோழனுக்கு தமிழ்நாட்டில் பிரம்மாண்ட சிலைகள்

## பிரதமர் மோடி உறுதி




அரியலூர், ஜூலை 28-

**பிரிட்டனுக்கு முன்பாகவே சோழர்கள் குடவோலை முறையில் ஆட்சி செய்தனர் என்று பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் வளாகத்தில், மத்திய கலாச்சாரத் துறை சார்பில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டார்.

விழாவில் அவர் பேசியதாவது: 140 கோடி இந்தியர்களின் நலனுக்காகவும், இந்தியாவின் தொடர்ச்சியான முன்னேற்றத்திற்காகவும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க கோவிலில் நான் பிரார்த்தனை செய்தேன். சோழ மன்னர்கள் இலங்கை, மாலத்தீவுகள் மற்றும் தென்கிழக்கு ஆசியா போன்ற பகுதிகளுடன் தங்கள் ராஜதந்திர மற்றும் வர்த்தக உறவுகளை கணிசமாக மேம்படுத்தினர்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, சோழப் பேரரசில் ஜனநாயக முறைப்படி தேர்தல்கள் நடத்தப்பட்டன. பிரிட்டனுக்கு முன்பாகவே சோழர்கள் குடவோலை முறையில் ஆட்சி செய்தனர். ராஜேந்திர சோழன் கங்கை நதிநீரை கொண்டு வந்தார்.

இன்று மீண்டும் காசியிலிருந்து கங்கை நீர் இங்கு கொண்டுவரப்பட்டதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று உலகமே நிலையற்ற தன்மை, வன்முறை மற்றும் சுற்றுச்சூழல் போன்ற பிரச்சினைகளால் போராடிக் கொண்டிருக்கும் வேளையில், தீர்வுகளுக்கான பாதையை சைவ சிந்தாந்த கொள்கைகள் நமக்குக் காட்டுகின்றன. அன்பே சிவம் என்ற திருமூலரின் கருத்தை உலகம் ஏற்றுக் கொண்டால், பெரும்பாலான நெருக்கடிகள் தானாகவே தீர்க்கப்படும்.

இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மையை யாராவது தாக்கினால், இந்தியா அதன் சொந்த மொழியில் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதை ஆபரேஷன் சிந்தூரின் போது உலகம் கண்டது. அது இந்தியாவின் வலிமையையும் உறுதியையும் உலகமே ஒப்புக்கொள்ள வைத்துள்ளது''

இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

# தமிழ்நாடு வந்த பிரதமர் மோடியிடம் மாநில அரசு அளித்த 5 கோரிக்கைகள்?

சென்னை, ஜூலை 28-

**தமிழகம் வந்த பிரதமர் மோடியிடம் 5 கோரிக்கைகள் அடங்கிய மனு அளிக்கப்பட்டு உள்ளது. முதல்வர் ஸ்டாலின் சார்பில் தமிழக அரசின் கோரிக்கை மனுவை அமைச்சர் தங்கம் தென்னரசு பிரதமர் மோடியிடம் வழங்கினார்.**

* சமக்ர சிக்ஷா திட்டத்தில் தமிழகத்துக்கான கல்வி நிதியை விடுவிக்க வேண்டும். தமிழகத்திற்கான கல்வி நிதி ரூ.2,121.59 கோடியை விடுவிக்க வேண்டும். மத்திய அரசு நிதி வழங்காமல் இருப்பது லட்சக்கணக்கான மாணவர்களின் எதிர்காலத்தை பாதிக்கிறது.

* ரயில்வே திட்டங்களை விரைவுபடுத்த வேண்டும். கடந்த 10 ஆண்டுகளாக செயல்படுத்தாமல் உள்ள ரயில்வே திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

* கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும். ரூ.10.740 கோடியில் 34.8 கி.மீ தூரத்தில் அமைய உள்ள கோவை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒப்புதல் தர வேண்டும். ரூ.11,368 கோடியில் 32 கி.மீ., தூரத்திற்கு அமைய உள்ள மதுரை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு ஒப்புதல் தர வேண்டும்.

* 2025-26ம் ஆண்டிற்கான முதல் தவணை நிதியை விரைவாக வழங்க வேண்டும்.

* இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள், படகுகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மீனவர்களின் பாரம்பரிய மீன்படி உரிமைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு 5 கோரிக்கை மனுக்கள் பிரதமர் மோடியிடம் தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்டு உள்ளது.

### காவிரி ஆற்றில் ஒரு லட்சம் கனஅடி நீர் திறப்பு:

# 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

மேட்டூர், ஜூலை 28-

**மேட்டூர் அணை முழு கொள்ளளவாக உள்ள நிலையில், காவிரி ஆற்றில் விநாடிக்கு 1,00,000 கன அடி வரை உபரிநீர் திறக்கக்கப்பட்டுள்ளதால் சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, அரியலூர், தஞ்சாவூர், உள்ளிட்ட 11 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கரையோரம் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.**

கேரளா, கர்நாடகவில் பெய்து வரும் மழையில் அங்குள்ள அணைகள் நிரம்பியதையடுத்து, காவிரி ஆற்றில் உபரிநீர் திறக்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, காவிரி ஆற்றில் வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேட்டூர் அணை நடப்பாண்டில் 4வது முறையாக கடந்த 3 நாட்களுக்கு முன் முழு கொள்ளளவை எட்டியது. பின்னர், 16 கண் மதகு வழியாக உபரிநீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு நேற்று முன்தினம் இரவு 35,400 கன அடியாகவும், நேற்று காலை 45,400 கன அடியாக இருந்த நிலையில் மதியம் 12 மணிக்கு 60,400 கன அடியாக அதிகரித்தது. அணையிலிருந்து காவிரி ஆற்றில் திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 60,000 கன அடியிலிருந்து 75,000 கன அடியாக அதிகரித்து திறக்கப்பட்டது.

அணை மற்றும் சுரங்க மின் நிலையம் வழியாக 18,000 கன அடியும், 16 கண் மதகு வழியாக 57,000 கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. கால்வாய் பாசனத்துக்கு விநாடிக்கு 400 கன அடியாக திறக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 120 அடியாகவும், நீர் இருப்பு 93.47 டிஎம்சியாகவும் உள்ளது. அணைக்கான நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் நீர்வரத்தை நீர்வளத் துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர். இதுகுறித்து மேட்டூர் அணை உதவி செயற்பொறியாளர் செல்வராஜ் சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், கடலூர் மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுப்பி உள்ள கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்த கடிதத்தில், மேட்டூர் அணை நீர்மட்டம் 120 அடியாக உள்ளது. அணையிலிருந்து விநாடிக்கு 75,000 கன அடியாக தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணைக்கு வரும் நீர்வரத்து முழுவதுமாக காவிரி ஆற்றில் உபரிநீராக திறந்து விடப்படுகிறது. எந்த நேரத்திலும் உபரி நீர் காவிரி ஆற்றில் விநாடிக்கு 1,00,000 கன அடி வரை திறந்து விடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, காவேரி கரையோரம் வசிக்கும் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும். உடைமைகளின் பாதுகாப்பு மற்றும் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் அணையின் பாதுகாப்பு கருதி அணையில் இருந்து திறக்கப்படும் நீரின் அளவும் வினாடிக்கு 1,00,000 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனவே, காவிரி கரையோரம் மற்றும் தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறும், அவர்களின் உயிர் மற்றும் உடைமைகளின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்புக்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு நீர்வளத் துறை அதிகாரிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

நீர்வரத்து முழுவதுமாக காவிரி ஆற்றில் உபரி நீராக திறந்து விடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பள்ளிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகள்:

# மாநிலங்களுக்கு மத்திய அரசு உத்தரவு

புதுடெல்லி, ஜூலை 28-

**பள்ளிகளில் மாணவர்களுக்கு செய்யப்பட்டு உள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை கட்டாயம் கண்காணிக்க வேண்டும் என மாநிலங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டு உள்ளது.**

ராஜஸ்தான் மாநிலம் ஜலாவரில் உள்ள அரசு பள்ளிக்கூடத்தின் ஒரு பகுதி சமீபத்தில் இடிந்து விழுந்ததில் 7 மாணவர்கள் பலியாகினர். 28 பேர் காயமடைந்தனர். பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திய இந்த விபத்தை தொடர்ந்து நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை ஆய்வுசெய்ய மத்திய அரசு உத்தரவிட்டு உள்ளது.


இதுதொடர்பாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு மத்திய கல்வி அமைச்சகம் கடிதம் அனுப்பி உள்ளது. அதில் கூறப்பட்டு உள்ளதாவது:-

மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வை உறுதி செய்வதில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இது பள்ளிகளில் பாதுகாப்பு தணிக்கை மற்றும் குழந்தைகள் தொடர்பான வசதிகள் பாதுகாப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கிறதா? என்பதை ஆய்வு செய்வதையும் உள்ளடக்கியதாகும். பள்ளி கட்டிடங்களின் உறுதித்தன்மை, தீ தடுப்பு வசதிகள், அவசரகால வெளியேறும் வசதிகள், மின் இணைப்பு போன்றவை முழுமையாக ஆய்வு செய்யப்பட வேண்டும்.

மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய எந்தவொரு ஆபத்தான சூழ்நிலை, விபத்து உள்ளிட்ட சம்பவம் குறித்து 24 மணி நேரத்திற்குள் அதற்காக நியமிக்கப்பட்ட மாநிலம் அல்லது யூனியன் பிரதேச அதிகாரியிடம் தெரிவிக்கப்பட வேண்டும். தாமதம், அலட்சியம் அல்லது நடவடிக்கை எடுக்கத்தவறிய சம்பவங்களில் கடுமையான பொறுப்புக்கூறல் உறுதி செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டு உள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**




| BSE | NSE |
|---|---|
| -721.08 | -225.10 |
| பாயின்ட் 81,463.09 | பாயின்ட் 24,837.00 |



**தங்கம்**

1 சவரன் ₹73,280

1 கிராம் ₹9,160



**வெள்ளி**


1 கிலோ ₹126,000

1 கிராம் ₹126.00

**டாலர்** ₹86.46

**பெட்ரோல்** ₹102.63

**டீசல்** ₹94.24



# போர் நிறுத்த பேச்சுவார்த்தைக்கு தாய்லாந்து-கம்போடியா ஒப்புதல்

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், ஜூலை 28-**



தாய்லாந்து, கம்போடியா உடனடியாக போர் நிறுத்த பேச்சுவார்த்தை நடத்த ஒப்புக்கொண்டன என அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா அதிபராக ட்ரம்ப் பொறுப்பேற்ற முதல் நாளில் இருந்தே, தன்னை தானே பெருமைப்படுத்தி பேசுவதை வழக்கமாக கொண்டுள்ளார். எந்த இரு நாடுகளுக்கு இடையே போர் நடந்தாலும், நான்தான் முடிவுக்கு கொண்டு வந்தேன் என்று கூறுவது அவரது வழக்கம். இஸ்ரேல்-ஈரான் மற்றும் இந்தியா-பாகிஸ்தான் போரை நிறுத்தியதாக ட்ரம்ப் பலமுறை சொல்லி உள்ளார்.

தற்போது, தாய்லாந்து-கம்போடியா இடையே நடந்து வரும் போரை முடிவுக்கு கொண்டு வர தான் முயற்சி செய்து வருவதாக ட்ரம்ப் கூறி உள்ளார். இது குறித்து, அமெரிக்கா அதிபர் டொனால்டு ட்ரம்ப் கூறியதாவது: எல்லை மோதல்களுக்குப் பிறகு தாய்லாந்தும் கம்போடியாவும் உடனடி போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகளை நடத்த ஒப்புக் கொண்டன.

இரு தரப்பினரும் அமைதியை நாடுகின்றனர். அதே நேரத்தில் சர்வதேச அமைப்புகள் நீண்டகால தீர்வுக்கு அழுத்தம் கொடுக்கின்றன. ஸ்காட்லாந்தில், கம்போடிய பிரதமர் ஹன் மானெட் மற்றும் தாய்லாந்தின் தற்காலிக பிரதமர் பும்தம் வெச்சாயாச்சாயுடன் தனித்தனியாகப் பேசினேன். தொடர்ந்து சண்டையிடுவது அமெரிக்காவின் சாத்தியமான வர்த்தக ஒப்பந்தங்களுக்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும் இரு தலைவர்களையும் எச்சரித்தேன். இவ்வாறு அவர் கூறினார்.

# டி.சி.எஸ். நிறுவனத்தில் இருந்து 12,200 ஊழியர்கள் வேலை நீக்கம்

**புதுடில்லி, ஜூலை 28-**

ஊழியர்கள் 12,200 பேரை டிஸ்மிஸ் செய்ய போவதாக டி.சி.எஸ். நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

தகவல் தொழில்நுட்ப துறையில் முன்னணி நிறுவனமாக டாடா கன்சல்டன்சி நிறுவனம் விளங்கி வருகிறது. இந் நிறுவனத்தின் கிளைகளில் லட்சக்கணக்கானோர் பணியாற்றி வருகின்றனர்.

இந் நிலையில் நிறுவனத்தில் தற்போது பணியாற்றி வரும் 12,200 பேரை வேலை நீக்கம் செய்ய இருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்த அறிவிப்பை அந் நிறுவனத்தினன் முதன்மை செயல் அதிகாரி கிரிதி வாசன் வெளியிட்டு உள்ளார்.

அவர் மேலும் கூறி உள்ளதாவது; பணிநீக்கம் செய்யப்பட உள்ள அனைவருமே இடைநிலை மற்றும் மூத்த நிலையில் பணியாற்றி வரும் ஊழியர்கள்ளாவர். ஒட்டு மொத்த பணியாளர்கள் எண்ணிக்கையில் இந்த ஆட்குறைப்பு என்பது வெறும் 2 சதவீதம் மட்டுமே. இது எளிதான முடிவு அல்ல.செயற்கை நுண்ணறிவு மற்றும் அதனால் ஏற்படும் மாற்றங்களை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். இந்த தொழில் நுட்பத்தை பெரிய அளவில் பயன்படுத்துவது பற்றி யோசித்து வருகிறோம். இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

இந்த பணி நீக்க நடவடிக்கை என்பது, 2026ம் ஆண்டு நிதியாண்டில் (அதாவது ஏப்.2025 முதல் மார்ச் 2026 வரை) படிப்படியாக அமல்படுத்தப்படுகிறது.

# கங்கை கொண்ட சோழபுரத்தில் பிரதமர் மோடி 'ரோடு ஷோ'



**திருச்சி, ஜூலை 28-**

கங்கை கொண்ட சோழபுரத்தில் பிரதமர் மோடி "ரோடு ஷோ" சென்றார். மக்கள் திரளாக வந்து அவருக்கு வரவேற்பு அளித்தனர்.

திருச்சியில் ரோடு ஷோ முடித்துக் கொண்டு, விமான நிலையம் வந்ததும் அங்கிருந்து ஹெலிகாப்டரில் கங்கைகொண்ட சோழபுரத்துக்கு புறப்பட்டார் பிரதமர் மோடி. அங்கு பைபாஸ் சாலையை ஒட்டி பொன்னேரி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடில் இறங்கினார்.

கங்கைகொண்ட சோழபுரத்திற்கு வருகை தந்த பிரதமரை ஆளுநர் ஆர்.என்.ரவி, எல்.முருகன், அமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் வரவேற்றனர். பின்னர், ஹெலிகாப்டர் இறங்கும் தளத்திலிருந்து கங்கை கொண்ட சோழபுரம் கோவில் வரை 2 கி.மீ. தூரம் ரோடு ஷோவாக புறப்பட்டு சென்றார்.

அப்போது சாலையில் இருபுறமும் திரளாக கூடி நின்ற மக்களை பார்த்து உற்சாகமாக கையசைத்தார். பிரதமர் மோடியை வரவேற்கும் வகையில் பொன்னேரியிலிருந்து கோவில் வளாகம் வரை சாலையின் இருபுறமும் பா.ஜ.க., அ.தி.மு.க. கொடி தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. சோழர் கால வரலாற்று சிறப்புமிக்க நகரமான கங்கைகொண்ட சோழபுரத்துக்கு பிரதமர் மோடியின் வருகை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

அரியலூர் மாவட்டத்திற்கு, கங்கைகொண்ட சோழபுரத்துக்கும் இதுவரை பிரதமர்கள் யாரும் வந்ததில்லை. பிரதமர் மோடி கங்கை கொண்டசோழபுரத்துக்கு வந்த முதல் பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

## மும்பை-புனே விரைவுச்சாலையில்

# 20 வாகனங்கள் மீது அடுத்தடுத்து லாரி மோதி விபத்து

**மும்பை, ஜூலை 28-**

மகாராஷ்டிர மாநிலம் ராய்காட் மாவட்டத்தில் உள்ள கோபோலி அருகே மும்பை-புனே விரைவுச் சாலையில் இன்று (ஜூலை 26) ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது.

மும்பை நோக்கிச் செல்லும் சாலையில் நிகழ்ந்த இந்த விபத்தில் சுமார் 20 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கொண்டன. முதற்கட்ட தகவல்களின்படி, ஒரு கன்டெய்னர் லாரி சரிவில் இறங்கும்போது பிரேக் செயலிழந்ததால் இந்த விபத்து ஏற்பட்டது. கட்டுப்பாட்டை இழந்த லாரி, அதன் முன்னால் சென்று கொண்டிருந்த பல வாகனங்கள் மீது மோதியது. இதனால் வாகனங்கள் அடுத்தடுத்து மோதிக்கொண்டன.

இந்த விபத்தில் இது வரை 19 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் நவி மும்பையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு பெண் உயிரிழந்ததாக தகவல் வெளியாகி உள்ளது. விபத்தை ஏற்படுத்திய கன்டெய்னர் லாரி ஓட்டுநர் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டதில், விபத்து நடந்த நேரத்தில் அவர் மது அருந்தவில்லை என்பது தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வருகிறது.

# அமெரிக்கா: விமானத்தில் திடீர் தீவிபத்து; பயணிகள் தப்பினர்



**வாஷிங்டன், ஜூலை 28-**

அமெரிக்காவில் ஓடுபாதையில் போயிங் ஜெட் விமானம் தீப்பிடித்தது. பயணிகள் அனைவரும் அவசர கால வழியாக வெளியேற்றப்பட்டனர்.

அமெரிக்கன் எர்லைன்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான போயிங் விமானம் டென்வர் விமான நிலையத்தில் இருந்து மியாமிக்கு செல்ல இருந்தது. விமானத்தில், 173 பயணிகள் உட்பட 179 பேர் இருந்தனர். ஓடுபாதையில் இருந்து விமானம் புறப்பட தயாரான போது, சக்கரத்தில் தீப்பற்றிக் கொண்டது. தீயும் புகையும் கடும் அச்சத்தை ஏற்படுத்திய நிலையில் பயணிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

அவசரகால சறுக்குகளைப் பயன்படுத்தி 173 பயணிகளும் ஆறு பணியாளர்களும் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர் என விமான நிலைய அதிகாரிகள் உறுதி செய்தனர். விமானம் புறப்படும் போது லேண்டிங் கியர் செயலிழந்து தீ பற்றிக் கொண்டதாகவும் இதற்கான காரணங்கள் ஆய்வு செய்யப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# திருப்பதி கோவிலில் குறைந்த கூட்டம்


**திருப்பதி, ஜூலை 28-**

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் கடந்த சில மாதங்களாக வார இறுதி விடுமுறை நாட்களில் வரலாறு காணாத அளவு பக்தர்கள் தரிசனத்திற்கு வந்தனர். இதேபோல் பக்தர்கள் தரிசனத்திற்கு அதிக அளவில் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் குறைந்த அளவு பக்தர்கள் மட்டுமே தரிசனத்திற்கு வந்தனர். தரிசனத்திற்கு வந்த பக்தர்கள் 23 வைகுந்தம் தங்கும் அறைகளில் தங்க வைக்கப்பட்டு தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டு கின்றனர்.

ரூ.300 சிறப்பு தரிசனத்தில் வந்த பக்தர்கள் நேரடியாக தரிசனத்திற்கு அனுமதிக்கப்பட்டனர். நேரடி இலவச தரிசனத்தில் 12 மணி நேரம் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். திருப்பதியில் நேற்று முன்தினம் 85,740 பேர் தரிசனம் செய்தனர். 35,555 பக்தர்கள் முடி காணிக்கை செலுத்தினர். ரூ 3.41 கோடி உண்டியல் காணிக்கை வசூலானது.

# 2-ம் கட்ட ஆட்குறைப்பு நடவடிக்கை: 3,850 பேரை வெளியேற்ற நாசா முடிவு

**வாஷிங்டன், ஜூலை 28-**




அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசாவில் சுமார் 14 ஆயிரம் ஊழியர்கள் பணி செய்து வருகிறார்கள். இந்த நிலையில் அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் அதிரடி நடவடிக்கையால் பல்வேறு நிறுவனங்களில் ஆட்குறைப்பு செய்யப்பட்டு வருகிறது. நாசாவிலும் ஏற்கனவே ஒருமுறை ஆட்குறைப்பு செய்யப்பட்டது.

தற்போது 2-வது முறையாக பெரிய அளவில் ஆட்குறைப்பு நடவடிக்கை எடுக்கப்பட இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. இதில் 20 சதவீத ஊழியர்கள் வேலை இழக்கும் அபாயம் உள்ளது. அதாவது சுமார் 3 ஆயிரத்து 870 பேர் வெளியேற்றப்படுகிறார்கள் என்று கணிக்கப்பட்டு உள்ளது.

இந்த மாத தொடக்கத்தில் டிரம்ப் நிர்வாகம் குறைந்தது 2 ஆயிரத்து 145 நாசாவின் மூத்த ஊழியர்களை பணிநீக்கம் செய்ய கடிதம் அனுப்பியது. அவர்களில் பெரும்பாலானோர் சிறப்பு திறன்கள் மற்றும் நிர்வாக திறன்களை கொண்டவர்கள். இந்த ஆண்டு மார்ச் மாதத்தில், உலகின் முன்னணி விண்வெளி நிறுவனம், ஜனாதிபதி டிரம்ப் பதவியேற்ற பிறகு ஜனவரியில் வெளியிடப்பட்ட நிர்வாக உத்தரவுகளுக்கு இணங்க குறைந்தது 3 துறைகளை மூடப்போவதாக அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் மீண்டும் இரண்டாம் கட்ட ஆட்குறைப்பு நடவடிக்கை எடுக்கப்படும் என்ற தகவல்கள் வெளியானதால் நாசா ஊழியர்கள் கலக்கத்தில் உள்ளனர். இன்னும் சில நாட்களில் 20 சதவீதம் வரை ஆட்குறைப்பு இருக்கும் என்றும், எண்ணிக்கை வேறுபடலாம் என்றும் செய்திதொடர்பு அதிகாரி ஒருவர் கூறி உள்ளார். இதற்கிடையே கடந்த 20-ந்தேதி நூற்றுக்கணக்கான நாசா ஊழியர்கள், விண்வெளி அருங்காட்சியகம் அருகே திரண்டு போராட்டம் செய்தது குறிப்பிடத்தக்கது.

**28-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** நுட்பமான வேலைகளைச் சிறப்பாகச் செய்தாலும் நல்ல பெயர் இருக்காது. பிள்ளைகளின் ஆரோக்கியத்தைப் பேணிக் காப்பது நல்லது. பயணத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள்.

**ரிஷபம்:-** இன்று சுமாரான நாள். தூக்கம் குறைவதால், உடல் நலம் கெடும். தாயின் நலத்தில் அக்கறை கொள்ள வேண்டிய நாள். வியாபாரத்தில் எதிர்பார்த்த வரவுகள் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது.

**மிதுனம்:-** பிள்ளைகள் மேல் பாசம் அதிகரிக்கும். காரியம் யாவினும் கை கொடுப்பாள் மனைவி. தனலாபமும், நல்ல நண்பர்கள் சேர்க்கையும் ஏற்படும். உற்சாகம் பிறக்கும்.

**கடகம்:-** சுமாரான நாள். சோதனைகளை சாதனைகளாக மாற்றுவீர்கள். வியாபார விருத்திக்கு கடின உழைப்பு தேவைப்படும். படிப்பில் கூடுதல் கவனம் தேவை.

**சிம்மம்:-** பணவரவு, வாக்கு மேன்மை, குடும்ப சுகம், சந்ததி விருத்தி, பதவி உயர்வு, மனத்திருப்தி என அனைத்தும் ராஜயோகம் தான். வாகன மற்றும் போஜன சுகங்கள் கூடிவரும்.

**கன்னி:-** இன்று சுமாரான நாள். பெண்களால் பணவிரயம் ஏற்படும். இடைவிடாத பணி காரணமாக வேளாவேளைக்கு உணவருந்து முடியாத நிலை ஏற்படும். நாவடக்கம் தேவை.

**துலாம்:-** பிறருக்கு உதவி புரிவதால் பெரு மகிழ்ச்சி அடைவீர்கள். எதிர்பார்த்த தனவரவு கைக்கு வந்து சேரும். தான தர்மங்கள் செய்வதில் ஆர்வம் ஏற்படும். மாணவர்களின் கல்வித்தரம் உயரும்.

**விருச்சிகம்:-** பெரிய மனிதர்கள் சகவாசத்தால் நல்லது நடக்கும். அரசு ஆதரவு கிடைக்கும். வளமான வாழ்க்கை வாசற்கதவைத் தட்டும். புகழ் ஓங்கும். விருப்பங்களும் கைகூடும்.

**தனுசு:-** உங்கள் காட்டில் மழைதான். அனைத்து பாக்கியங்களும் பெருகும். தெய்வ நம்பிக்கையால், வாழ்வில் திருப்பங்கள் ஏற்படும். தொழில் வியாபாரம் விருத்தி அடையும்.

**மகரம்:-** சுமாரான நாள். முறையற்ற வழிகளில் பணம் வரலாம். உறவுகளிடையே மனக்கசப்பு உருவாகலாம். கோபத்தைக் குறைத்தால் நன்மை ஏற்படும்.

**கும்பம்:-** அரசு வழியில் நன்மைகளை எதிர்பார்க்கலாம். பதவி உயர்வின் மூலம் அந்தஸ்தும் உயரும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. எல்லா வகையிலும் ஏற்றம் தரும் நாள்.

**மீனம்:-** தனவரவு அதிகரிக்கும் நாள். காரிய வெற்றி தரும் களிப்பான நாள். தன்னம்பிக்கை, தைரியம் மற்றும் தேகதிடம் அதிகரித்து, நன்மைகள் ஏற்படும் நல்ல நாள்.

## ஜார்க்கண்ட், சத்தீஸ்கரில்

# 7 மாவோயிஸ்டுகள் சுட்டுக்கொலை

**ராஞ்சி, ஜூலை 28-**

ஜார்க்கண்ட், சத்தீஸ்கரில் பாதுகாப்புப் படையினர் நடத்திய வெவ்வேறு என்கவுன்டரில் 7 மாவோயிஸ்டுகள் சனிக்கிழமை சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பிஜாப்பூர் மாவட்டத்தில் மாவோயிஸ்டுகள் நடமாட்டம் குறித்து உளவுத் துறையின் தகவல்களின் அடிப்படையில், பாதுகாப்புப் படையினர் சனிக்கிழமை தேடுதல் நடவடிக்கையைத் தொடங்கின. தொடர்ந்து மாலையில் இருத்தரப்பினர் இடையே துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது. இதுவரை, என்கவுண்டர் நடந்த இடத்தில் இருந்து துப்பாக்கிகள் மற்றும் பிற ஆயுதங்களுடன் நான்கு மாவோயிஸ்டுகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பஸ்தர் பிரிவு ஐஜி சுந்தர்ராஜ் கூறினார்.கடந்த 18 மாதங்களில், பஸ்தர் மலைத்தொடரில் பல்வேறு மோதல்களில் 425 மாவோயிஸ்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதனிடையே, ஜார்க்கண்டின் கும்லா மாவட்டத்தில் சனிக்கிழமை நடந்த துப்பாக்கிச் சண்டையில் மூன்று நக்சல்கள் கொல்லப்பட்டதாக போலீஸார் தெரிவித்தனர். உளவுத் துறையின் தகவலின் பேரில், ஜார்க்கண்ட் சிறப்பு அதிரடிப் படை மற்றும் கும்லா காவல் துறையினரால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# அமெரிக்காவில் 10 கோடி பேரை வெப்ப அலை தாக்கும் அபாயம்

## வானிலை மையம் எச்சரிக்கை

**வாஷிங்டன், ஜூலை 28-**

அமெரிக்காவில் சுமார் 10 கோடி பேரை கடுமையான வெப்ப அலை தாக்கும் அபாயம் இருப்பதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

காலநிலை மாற்றம் என்பது உலகம் சந்திக்கும் முக்கிய பிரச்சினைகளுள் ஒன்று. இதனால் பனிப்பாறை உருகி கடல் மட்டம் உயர்தல், வெப்ப அலை என பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகின்றன. எனவே காலநிலை மாற்றத்தை சமாளிக்க தேவையான நடவடிக்கை எடுக்க உலக நாடுகளை ஐ.நா.சபை வலியுறுத்துகிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸ், மைனே உள்ளிட்ட மாகாணங்களில் கடந்த சில நாட்களாக வெயில் வாட்டி வதைத்து வருகிறது. குறிப்பாக, வட கரோலினாவில் 113 டிகிரி, வாஷிங்டன் டி.சி.யில் 109 டிகிரி என வெயில் கொளுத்துகிறது. இதனை தாக்குப் பிடிக்க முடியாமல் அங்குள்ள மக்கள் திணறுகின்றனர். இதனால் சுமார் 10 கோடி பேரை கடுமையான வெப்ப அலை தாக்கும் அபாயம் இருப்பதாக அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. வரும் 29-ம் தேதி வரை இந்த வெயில் நீடிக்கும் என்பதால் பொதுமக்கள் தேவையின்றி வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டு உள்ளனர்.

# மியான்மரில் நிலநடுக்கம்

**நேபிடா, ஜூலை 28-**

மியான்மரில் நேற்று காலை 10.45 மணிக்கு மிதமான நிலநடுக்கம் ஏற்பட்டது.

மியான்மர் நாட்டில் கடந்த மார்ச் மாதம் 28-ந்தேதி ரிக்டர் 7.7 மற்றும் ரிக்டர் 6.4 அளவில் அடுத்தடுத்து பயங்கர நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இதனால் அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளில் பலத்த சேதம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தில் சுமார் 3,700 பேர் உயிரிழந்ததாகவும், 5 ஆயிரத்திற்கும் அதிகமானோர் படுகாயமடைந்ததாகவும் அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இதனை தொடர்ந்து மியான்மரில் அவ்வப்போது சிறிய அளவிலான நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. அந்த வகையில், மியான்மரில் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டது. காலை 10.45 மணியளவில் (இந்திய நேரப்படி) ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 3.6 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

161 கி.மீ. ஆழத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், 22.81 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 95.51 டிகிரி கிழக்கு தீர்க்க ரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. முன்னதாக நேற்று முன்தினம் காலை 11.27 மணியளவில் ரிகடர் 3.4 அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

# உத்தவ்தாக்கரேவுக்கு முதல்வர் வாழ்த்து

**சென்னை, ஜூலை 28-**

சிவசேனா கட்சி நிறுவனரும் மகாராஷ்டிரா முன்னாள் முதல்வருமான உத்தவ் தாக்கரேவுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், மகாராஷ்டிராவின் அடையாளத்தை நிலைநிறுத்துவதற்கான உத்தவ் தாக்கரேவின் உறுதியான நிலைப்பாடு பாராட்டுக்குரியது.

கூட்டாட்சி மற்றும் மொழியியல் கண்ணியத்தை பாதுகாக்கும் வலிமைக்கு வாழ்த்துகள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்காவில் 11 பேருக்கு கத்திக்குத்து

**வாஷிங்டன், ஜூலை 28-**

அமெரிக்காவின் மிக்சிகனில் உள்ள வால்மார்ட் கடையில் நடந்த கத்திக்குத்து சம்பவத்தில் 11 பேர் காயம் அடைந்தனர். தாக்குதல் நடத்திய நபர் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்காவின் வடக்கு மிச்சிகனில் உள்ள டிராவர்ஸ் நகரில், வால்மார்ட் கடை ஒன்று இயங்கி வருகிறது. இந்த கடைக்குள் புகுந்த மர்மநபர் ஒருவர் கண்ணில் தென்பட்டவர்களை எல்லாம் சரமாரியாக கத்தியில் குத்தினார்.

இந்த சம்பவத்தில், 11 பேர் காயம் அடைந்தனர். இவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளனர்.

இதில் 5 பேர் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. தாக்குதல் நடத்திய நபர் கைது செய்யப்பட்டார். அவர் வெளிநாட்டில் இருந்து அமெரிக்காவில் குடியேறியவர் என்று முதல் கட்ட தகவல்கள் வெளியாகி உள்ளன. இது குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

**மரம் மனிதனின் உரம்**

# தெரு நாய்களை கருணை கொலை செய்ய தமிழ்நாடு அரசு அனுமதி

**சென்னை, ஜூலை 28-**

மோசமான காயமடைந்து, நோய் வாய்ப்பட்டு சிரமப்படும் தெரு நாய்களை கருணை கொலை செய்யலாம் என்று தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது.

தெரு நாய்களால் ரேபிஸ் உள்ளிட்ட நோய் பாதிப்புகள் ஏற்படும் நிலையில் தமிழ்நாடு அரசின் கால்நடை துறை அரசாணை வெளியிட்டது. பதிவு செய்யப்பட்ட கால்நடை மருத்துவர்கள் மூலம் கருணை கொலை செய்ய வேண்டும். கருணைக் கொலை செய்யப்படும் நாய்கள் குறித்த ஆவணங்கள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். கருணை கொலை செய்யப்படும் தெரு நாய்களை முறையாக அடக்கம் செய்ய வேண்டும் எனவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சாலையில் சுற்றித்திரியும் விலங்குகளை கட்டுப்படுத்துவது குறித்த கொள்கை விரைவில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்வர் பதவி: பழனிசாமியை பின்னுக்கு தள்ளிய மு.க.ஸ்டாலின்





**சென்னை, ஜூலை 28-**

தமிழகத்தில் அதிக நாட்கள் முதல்வர் பதவி வகித்ததில் பழனிசாமியை முதல்வர் மு.க.ஸ்டாலின் பின்னுக்கு தள்ளியுள்ளார்.

சுதந்திரத்துக்கு பிறகு தமிழகத்தில் 11 பேர் முதல்வர் பதவி வகித்துள்ளனர். இதில், 19 ஆண்டுகள் (1969, 1971, 1989, 1996, 2006 என 5 முறை) முதல்வராக இருந்த கருணாநிதி, அதிக ஆண்டுகள் முதல்வர் பதவியை வகித்தவர் என்ற பட்டியலில் முதலிடத்தில் உள்ளார்.

அடுத்ததாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா 1991, 2001, 2011, 2016 என 4 முறை முதல்வரானார். இதில் 2001, 2011 ஆகிய 2 முறை அவரது பதவி காலத்தில் பதவியை இழந்து மீண்டும் முதல்வரானார். இதனால், இவர் 14 ஆண்டுகள் 4 மாதங்கள் முதல்வர் பதவியை வகித்து 2-வது இடத்தில் உள்ளார்.

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். 1977, 1980, 1984 என தொடர்ந்து 3 முறை முதல்வராகி சாதனை படைத்தார். பதவியேற்றது முதல் மறையும் வரை 10 ஆண்டுகள் 2 மாதங்கள் தமிழக முதல்வராக இருந்து 3-வது இடத்தில் உள்ளார்.

இந்த பட்டியலில், சுமார் ஒன்பதரை ஆண்டுகள் முதல்வராக இருந்த காமராஜர் 4-வது இடத்தில் உள்ளார். ஜெயலலிதா மறைவுக்குப் பின் 2017 பிப். 16-ம் தேதி முதல்வராக பொறுப்பேற்ற பழனிசாமி 4 ஆண்டுகள் 2 மாதங்கள் 20 நாட்கள் முதல்வராக பொறுப்பு வகித்து 5-வது இடத்தில் இருந்தார்.

அதன்பின், 2021 மே 7-ம் தேதி முதல்வராக பொறுப்பேற்ற மு.க.ஸ்டாலின் 4 ஆண்டுகள் 2 மாதங்கள் 20 நாட்களை நேற்று முன்தினம் நிறைவு செய்த நிலையில், பழனிசாமியை பின்னுக்குத் தள்ளி, அதிக நாட்கள் முதல்வராக இருந்தவர்கள் பட்டியலில் தற்போது 5-வது இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

# முதல்வர், த.வெ.க. தலைவர் விஜய் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல்

**சென்னை, ஜூலை 28-**

சென்னை ஆழ்வார்பேட்டை சித்தரஞ்சன் சாலையில் உள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், நீலாங்கரையில் உள்ள த.வெ.க. தலைவர் விஜய் வீடுகளுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு உள்ளது.

சென்னை போலீஸ் கட்டுப்பாட்டு அறைக்கு போனில் பேசிய வாலிபர் ஒருவர் இன்று (நேற்று) மாலையில் முதல்வர் டிஸ்சார்ஜ் ஆகும் நிலையில் அவரது வீட்டில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக கூறி விட்டு போனை துண்டித்து விட்டார். மிரட்டல் விடுத்த நபரின் பெயர் விக்னேஷ் என்பது தெரிய வந்தது. அவர் தொடர்பு கொண்ட எண்ணை வைத்து கைது செய்வதற்கான நடவடிக்கையில் போலீசார் ஈடுபட்டு உள்ளனர்.

மிரட்டலை தொடர்ந்து நேற்று காலையில் முதல்வரின் வீட்டில் மோப்ப நாய் உதவியுடன் வெடிகுண்டு சோதனை நடத்தப்பட்டது. மோப்ப நாய் உதவியுடன் வெடிகுண்டு நிபுணர்கள் ஆழ்வார்பேட்டை வீட்டில் சோதனை நடத்தினார்கள். இதில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது தெரிய வந்தது. இருப்பினும் முதலமைச்சரின் வீடு உள்ள சித்தரஞ்சன் சாலை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் போலீசார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் முதல்வரின் வீட்டுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்ததையடுத்து நீலாங்கரையில் உள்ள த.வெ.க தலைவர் விஜய் வீட்டிற்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டு உள்ளது. மோப்ப நாய் உதவியுடன் வெடிகுண்டு நிபுணர்கள் வீட்டில் சோதனை நடத்தினார்கள். நீலாங்கரை போலீசார் நடத்திய விசாரணையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என தெரிய வந்துள்ளது.

## 10-வது நினைவு தினம்; ராமேசுவரத்தில்

# அப்துல் கலாம் நினைவு தினத்தை முன்னிட்டு சிறப்பு பிரார்த்தனை: பொதுமக்கள் அஞ்சலி





**ராமேசுவரம், ஜூலை 28-**

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் 10-வது நினைவு தினத்தை முன்னிட்டு ராமேசுவரத்தில் உள்ள கலாம் நினைவிடத்தில் ஆயிரக்கணக்கான பொது மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்தியாவின் 11-வது குடியரசுத் தலைவரான அப்துல் கலாம் தனது குடியரசுத் தலைவர் பதவி காலத்திற்கு பின்னர், நாடு முழுவதும் பயணம் செய்து கல்லூரி, பள்ளிகளில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று மாணவர்களுக்கு உத்வேகத்தை அளித்து வந்தார். மேகாலயா மாநிலம் ஷில்லாங்கில் உள்ள கல்லூரி விழாவில் கடந்த 27.07.2015 அன்று மாணவர்களிடம் பேசிக் கொண்டிருந்த போது உயிரிழந்தார். பின்னர் கலாமின் உடல் ராமேசுவரம் தீவில் உள்ள பேக்கரும்பு என்னும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிலையில் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் பத்தாவது ஆண்டு நினைவு நாள் ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் அனுசரிக்கப்பட்டது. ராமேசுவரத்தில் உள்ள பேக்கரும்பு அப்துல் கலாம் நினைவிடத்தில் கலாமின் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை கலாமின் கலாமின் அண்ணன் மகன் ஜெயினுலாபுதீன், மகள் நசீமா மரைக்காயர், மருமகன் நிஜாம், பேரன்கள் ஷேக் தாவூத், ஷேக் சலீம், ஆவுல் மீரா மற்றும் குடும்பத்தினர் இஸ்லாமிய முறைப்படி சிறப்பு பிரார்த்தனை செய்தனர்.

இதில் ராமேசுவரம் பள்ளிவாசல் ஜமாத் தலைவர் முகம்மது நாசர், பாஜகவின் பிரிவுசெயலாளர் வேலூர் இப்ராஹிம் மற்றும் பல்வேறு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர். தொடர்ந்து அரசு சார்பில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன (இஸ்ரோ) தலைவர் நாராயணன், ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், வட்டாட்சியர் அப்துல் ஜபார், ஆகியோர் அஞ்சலி செலுத்தினர். மேலும் பல்வேறு கட்சிகளை சேர்ந்த அரசியல் கட்சிகளை சேர்ந்த பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தினர். தொடர்ந்து பொது மக்கள், மாணவ, மாணவிகள், ராமேசுவரம் வந்த சுற்றுலாப் பயணிகள், பக்தர்களும் அஞ்சலி செலுத்தினர்.

# பிரதமருடன் ஒரே மேடையில் திருமாவளவன்

**அரியலூர், ஜூலை 28-**

கங்கைகொண்ட சோழபுரம் முப்பெரும் விழாவில் பிரதமர் மோடியுடன் ஒரே மேடையில் வி.சி.க. தலைவர் திருமாவளவன் பங்கேற்றுள்ளார்.

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் வளாகத்தில், ராஜேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரை விழா, கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் கட்டத் தொடங்கிய ஆயிரமாவது ஆண்டு விழா, தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது படையெடுத்துச் சென்ற ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா என முப்பெரும் விழா நடைபெற்றது.

இதன் நிறைவு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ் வரர் கோயிலுக்கு வருகை தந்த பிரதமர் மோடிக்கு கோயில் வளாகத் தில் திருவாவடுதுறை ஆதீனம் தலைமையில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர் தேவார திருவாசக பதிகங்களை ஓதுவார்கள் பாடினர்.

இதனைத் தொடர்ந்து இளையராஜாவின் ஆன்மிக நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை பிரதமர் மோடி கைகளால் தாளமிட்டப்படி ரசித்து பார்த்தார்.

விழா மேடையில் பிரதமர் மோடியுடன் தமிழக அரசு சார்பில் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் மற்றும் சிதம்பரம் எம்.பி. திருமாவளவன், மாவட்ட ஆட்சியர் பொ.ரத்தினசாமி உள்ளிட்டோர் இடம்பெற்றனர்.

தொடர்ந்து மத்திய பா.ஜ.க. அரசையும், பிரதமர் நரேந்திர மோடியையும் விமர்சித்து வரும் வி.சி.க. தலைவர் திருமாவளவன் பிரதமருடன் ஒரே மேடையில் பங்கேற்றிருப்பது பரவலாக கவனம் ஈர்த்துள்ளது.

# 3 முதல் 12-ம் வகுப்பு வரை பள்ளி மாணவர்களுக்கு ஆபரேஷன் சிந்தூர் பாடம்

**புதுடெல்லி, ஜூலை 28-**

'ஆபரேஷன் சிந்தூர்' ராணுவ நடவடிக்கை குறித்து மாணவர்கள் உணர்ந்து கொள்ளும் வகையில் புதிய பாடத்திட்டத்தை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்.சி.இ.ஆர்.டி.) உருவாக்கி வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

பயங்கரவாத அச்சுறுத்தல்களுக்கு நாடுகள் எவ்வாறு எதிர்வினையாற்றுகின்றன? என்பதையும், தேசிய பாதுகாப்பில் ராணுவம், ராஜதந்திரம் மற்றும் அமைச்சகங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு எவ்வாறு பங்கு வகிக்கின்றன? என்பதையும் மாணவர்களுக்குப் புரிய வைக்கும் நோக்கில் இது தயாரிக்கப்படுவதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்து உள்ளன.

இந்த சிறப்பு பாடத்தொகுதி 2 பகுதியாக உருவாக்கப்படுகிறது. இதில் 3 முதல் 8-ம் வகுப்பு வரை ஒரு பகுதியும், 9 முதல் 12-ம் வகுப்பு வரை மற்றொரு பகுதியும் இருக்கும் என்றும் அவை மேலும் தெரிவித்தன.

# ஓலைச்சுவடிகளை பாதுகாக்கும் தஞ்சை மணிமாறனுக்கு பிரதமர் மோடி பாராட்டு



**புதுடில்லி, ஜூலை 28-**

''ஓலைச்சுவடிகளில் பன்னெடுங்காலமாக பாதுகாக்கப்பட்டு வரும் நமது அறிவுச்செல்வத்தை அடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். அத்தகைய பணியை செய்து வரும் தஞ்சையை சேர்ந்த மணிமாறனின் பணி பாராட்டுக்குரியது,'' என்று, மன் கி பாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசினார்.

மன் கிபாத் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசியதாவது: சமீபத்தில் விண்வெளி வீரர் சுபன்ஷூ சுக்லா பாதுகாப்பாக பூமி திரும்பிய போது முழு தேசமும் மகிழ்ச்சியாலும், பெருமையாலும் நிறைந்தது.

மஹாராஷ்டிராவில் 12 கோட்டைகளை யுனெஸ்கோ அங்கீகரித்துள்ளது. இந்த கோட்டைகள் நமது சுயமரியாதையை வெளிப்படுத்துகின்றன. தஞ்சாவூரை சேர்ந்த மணி மாறன் தமிழ் ஓலைச்சுவடிகளை படித்து புரிந்து கொள்ளும் முறையை கற்றுக்கொடுத்தார். இதனால் இன்று பல மாணவர்கள் இந்தக் கலையில் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

ஓலைச்சுவடிகளில் பன்னெடுங்காலமாக பாதுகாக்கப்பட்டு வரும் நமது அறிவுச்செல்வத்தை அடுத்த தலைமுறைகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். அத்தகைய பணியை செய்து வரும் தஞ்சையை சேர்ந்த மணிமாறனின் பணி பாராட்டுக்குரியது பண்டைய காலத்து பிரதிகள் டிஜிட்டல் மயமாக்கப்படும். பின்னர் ஒரு தேசிய டிஜிட்டல் களஞ்சியம் உருவாக்கப்படும்.

அங்கு உலகம் முழுவதிலுமிருந்து மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இந்தியாவின் அறிவியல் மரபுகள் கற்றுக்கொள்ள முடியும். இவை வெறும் கையெழுத்துப் பிரதிகள் அல்ல, இவை இந்தியாவின் அத்தியாயங்கள், நாம் வரும் தலைமுறையினருக்கு வழங்க வேண்டும்.

போபாலில் உள்ள 200 பெண்கள் நகரத்தில் உள்ள 17 பூங்காக்களை சுத்தம் செய்து துணி பைகளை விநியோகம் செய்துள்ளர். ஒவ்வொரு நாளும் நாம் தூய்மைக்கு முன்னுரிமை அளிக்கும்போது தான் நாடு சுத்தமாக இருக்கும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.

## உத்தராகண்ட் மாநிலம்

# ஹரித்வார் மானசா தேவி கோவிலில் கடும் நெரிசல் - 7 பேர் உயிரிழப்பு

**ஹரித்வார், ஜூலை 28-**

உத்தராகண்ட் மாநிலம், ஹரித்வாரில் உள்ள மானசா தேவி கோவிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 6 பேர் உயிரிழந்தனர். 30-க்கும் மேற்பட்டோர் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோவிலுக்கு செல்லும் படிக்கட்டுகளில் மின்சாரம் தாக்கிதயதாக தகவல் பரவியதையடுத்து பக்தர்கள் அங்கிருந்து இறங்கிச் செல்ல முயற்சித்துள்ளனர். நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் ஓட முயற்சித்ததால் அங்கு கடுமையான கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது. இதில் சிக்கி ஆறு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர். மேலும் 30-க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த காவல்துறை மற்றும் மீட்புப் படையினர் உடனடியாக காயமடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். கோவிலுக்குச் செல்லும் படிக்கட்டுகளில் இருந்த மின்கம்பத்தில் மின் கசிவு ஏற்பட்டதாக தகவல் பரவியதே இந்த நெரிசலுக்கு காரணம் என்று போலீஸார் தெரிவிக்கின்றனர்.

மின்கம்பத்தில் உண்மையிலேயே மின்கசிவு ஏற்பட்டதா அல்லது யாரேனும் வேண்டுமென்றே வதந்தி பரப்பினார்களா என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. இந்த சம்பவத்துக்கு பிரதமர் மோடி, உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

# எனக்கு முதல்வர் ஆகும் தகுதி இல்லையா? திருமாவளவன்

**ராணிப்பேட்டை, ஜூலை 28-**

35 ஆண்டுகளாக அரசியல் பொது வாழ்க்கையில் உள்ளேன். நான் முதல்வர் பதவிக்கு தகுதி இல்லாதவனா? என திருமாவளவன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ராணிப்பேட்டையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் தொல்.திருமாவளவன் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் பேசியதாவது:- இந்து மதத்தை மட்டும் நீங்கள் விமர்சிப்பதாக கேட்கிறார்கள். அது சகோதரத்துவமாக இல்லை என்பதுதான் பிரச்சனை. பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். இதை ஏன் சுய விமர்சனமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது தான் நம் கேள்வி. தி.மு.க., காங்கிரஸ், இடதுசாரிகள், வி.சி.க. என அனைவரும் மதச்சார்பின்மை கொள்கையில் உள்ளோம்.

எங்கள் கருத்து இந்து சமூகத்திற்கு எதிரான கருத்து இல்லை. கருத்தியலுக்கு எதிரானதுதான். எடப்பாடி.பழனிசாமி, பா.ஜ.க. வை உடன் வைத்துக்கொண்டு தமிழகத்தை காப்போம் மக்களை மீட்போம் என்கிறார். நாம் மதச்சார்பின்மை காப்போம் என்கிறோம். எடப்பாடி பழனிசாமி அழைத்ததாக நான் கூறினேனா? துணை முதல்வர் பதவி தருவதாக அழைக்கின்றனர். நான் முதல்வர் பதவிக்கு தகுதி இல்லாதவனா? நானும் ரவுடிதான் என யார் யாரோ கிளம்புகின்றனர். முதல்வர் ஆக்குங்கள் என்கின்றனர்.

நானும் 35 ஆண்டுகளாக அரசியல் பொது வாழ்க்கையில் உள்ளேன். கலைஞர், ஜெயலலிதா, ஸ்டாலின், ராகுல் என அனைவரோடும் அரசியலில் பயணித்துள்ளேன். கொள்கை அரசியலில் செயல்படும் கட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சி. சங்பரிவார் தமிழகத்தில் காலுன்றிவிடக்கூடாது என கவலைபடுகின்ற கட்சி விடுதலை சிறுத்தைகள் கட்சி. அதனால் தி.மு.க.வுடன் உறுதியாக நிற்கிறோம் பயணிப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# நிறைபுத்தரிசி பூஜையை முன்னிட்டு சபரிமலை கோவில் நடை நாளை திறப்பு

**திருவனந்தபுரம், ஜூலை 28-**

இந்த ஆண்டுக்கான நிறைபுத்தரிசி பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை நாளை மாலை திறக்கப்படுகிறது.

சபரிமலை ஐயப்பன் கோவிலில் ஆண்டுதோறும் நிறைபுத்தரிசி பூஜை நடத்தப்பட்டு வருகிறது. இந்த பூஜையில் வைத்து பிரசாதமாக வழங்கப்படும் நெற்கதிர்களை வீட்டில் வைத்து பாதுகாத்து வந்தால் சகல ஐஸ்வர்யங்கள் கிடைக்கும் என்பது நம்பிக்கை.

இந்த ஆண்டுக்கான நிறைபுத்தரிசி பூஜை வருகிற 30-ந் தேதி சபரிமலை ஐயப்பன் கோவிலில் நடைபெற உள்ளது. இதற்காக கோவில் நடை நாளை (29-ந் தேதி) மாலை 5 மணிக்கு திறக்கப்படுகிறது. தந்திரி கண்டரரு ராஜீவரு முன்னிலையில் மேல்சாந்தி அருண்குமார் நம்பூதிரி நடையை திறந்து வைக்கிறார். மறுநாள் (30-ந் தேதி) நிறைபுத்தரிசி பூஜை வழிபாடுகள் நடைபெறும். இதற்காக பாரம்பரிய முறைப்படி பாலக்காடு, கொல்லம் பகுதிகளில் இருந்து ஐயப்ப சேவா சங்கத்தினர் நெற்கதிர் கட்டுகளை சபரிமலைக்கு தலைச்சுமையாக எடுத்து வருவார்கள்.

இதேபோல் சபரிமலையில் பயிரிடப்பட்டுள்ள நெற்கதிர்களும் அறுவடை செய்யப்பட்டு கோவிலில் வைத்து சிறப்பு பூஜைகள் நடைபெறும்.

பின்னர் அவை பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்கப்படும். நிறைபுத்தரிசி பூஜை வழிபாட்டுக்கு பிறகு அன்றைய தினம் இரவு 10 மணிக்கு கோவில் நடை சாத்தப்படுகிறது.

## சிறுமி பாலியல் வழக்கு:

# வாலிபருக்கு 15 நாள் நீதிமன்ற காவல்

**திருவள்ளூர், ஜூலை 28-**

கும்மிடிப்பூண்டியை அடுத்த ஆரம்பாக்கம் பகுதியை சேர்ந்த 8 வயது சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்த வடமாநில வாலிபர் ராஜு விஸ்வகர்மா என்ற நபரை 15 தனிப்படை போலீசார் தேடி வந்தனர். இந்த நிலையில் சூலூர்பேட்டை ரெயில் நிலையத்தில் வடமாநில வாலிபரை போலீசார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இதைதொடர்ந்து, ஆரம்பாக்கம் போலீஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் பொதுமக்கள் குவிந்ததால் கைதான வாலிபரை போலீசார் நேற்று கவரப்பேட்டை போலீஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். அங்கு விடிய விடிய அவனிடம் விசாரணை நடத்தப்பட்டது. நேற்று 2-வது நாளாக அவனிடம் போலீசார் விசாரணை நடத்தினார்கள்.

அவனிடம் விசாரணை நடத்தி முடித்த நிலையில் அவனை கோர்ட்டில் ஆஜர்படுத்த போலீசார் முடிவு செய்தனர். கோர்ட்டில் ஆஜர்படுத்துவதற்கு முன்பு அந்த வாலிபருக்கு மருத்துவ பரிசோதனை நடத்தப்பட்டது. மருத்துவ பரிசோதனை முடிந்த நிலையில், அவனை கோர்ட்டில் ஆஜர்படுத்தினர்.

இந்நிலையில், சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதானவனுக்கு 15 நாட்கள் நீதிமன்ற காவல் விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, ராஜு விஸ்வகர்மாவை 15 நாட்கள் நீதிமன்ற காவலில் அடைக்க பூவிருந்தவல்லி போக்சோ நீதிமன்ற நீதிபதி உத்தரவிடப்பட்டுள்ளது.

# காங்கிரஸ் தோல்விகளுக்கு தேர்தல் ஆணையமே காரணம்: ராகுல் காந்தி



**புதுடெல்லி, ஜூலை 28-**

இந்திய தேர்தல் ஆணையம் ஒரு ஒருதலைபட்சமான நடுவராக செயல்படுகிறது. அதனால்தான் காங்கிரஸ் கட்சி தேர்தலில் தோல்வி அடைந்து வருகிறது என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் எம்.பி.யும், மக்களவை எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி கூறியதாவது: தேர்தல் ஆணையம் ஒருதலைபட்சமான நடுவர் போல செயல்படுவதே காங்கிரசின் தேர்தல் தோல்விகளுக்கு காரணம். காங்கிரஸ் தொண்டர்களுடன் கட்சி மேலிடம் உறுதியாக இருக்கும்.

தேர்தலை முன்னிட்டு மக்களின் பிரச்சனைகளைக் கையில் எடுத்து போராடுங்கள். சட்டசபை தேர்தல் உள்பட பல்வேறு தேர்தல்களுக்கு வேட்பாளர்களை தேர்வு செய்யும்போது மாவட்ட மற்றும் நகர காங்கிரஸ் தலைவர்களிடம் நிச்சயம் கருத்து கேட்கப்படும்.

கிரிக்கெட்டில் நீங்கள் மீண்டும் மீண்டும் அவுட் ஆகும்போது நீங்களே உங்களை சந்தேகிக்கலாம். அப்போது நீங்கள் அவுட் ஆவது உங்கள் தவறல்ல, மாறாக நடுவர் ஒருதலைபட்சமாக செயல்படுவதே காரணம் என்பதை கண்டறியலாம்.

அதைப்போலவே, இந்திய தேர்தல் ஆணையம் ஒரு ஒருதலைபட்சமான நடுவராக செயல்படுகிறது. அதனால்தான் காங்கிரஸ் கட்சி தேர்தலில் தோல்வி அடைந்து வருகிறது. அதை பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ்.சும் கட்டுப்படுத்துகின்றன.

தேர்தல் ஆணையத்தின் சந்தேகத்துக்குரிய வாக்காளர் பட்டியல் காரணமாகவே 2017-ம் ஆண்டு குஜராத் தேர்தலில் நாம் தோல்வி அடைந்தோம்.

இந்த நாடு ஒரு கோவில் போல. அதில் எல்லாரும் வந்து பிரார்த்தனை செய்யலாம். ஆனால் பிரசாதம் யாருக்கு, என்ன கிடைக்க வேண்டும் என்பதை பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ். கட்டுப்படுத்துகின்றன என தெரிவித்தார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# இளையராஜாவின் இசை நிகழ்ச்சியை மெய்மறந்து ரசித்த பிரதமர் மோடி


**அரியலூர், ஜூலை 28-**

கங்கைகொண்ட சோழபுரம் முப்பெரும் விழாவில் இளையராஜாவின் ஆன்மிக இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இதனை பிரதமர் நரேந்திர மோடி ரசித்துப் பார்த்தார்.

அரியலூர் மாவட்டம் கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் கோயில் வளாகத்தில், மத்திய கலாச்சாரத் துறை சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. இதன் நிறைவு விழாவில் பிரதமர் மோடி பங்கேற்றார். கங்கைகொண்ட சோழபுரம் பிரகதீஸ் வரர் கோயிலுக்கு வருகை தந்த பிரதமர் மோடிக்கு கோயில் வளாகத்தில் திருவாவடுதுறை ஆதீனம் தலைமையில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது. பின்னர் தேவார திருவாசக பதிகங்களை ஓதுவார்கள் பாடினர்.


இதனைத் தொடர்ந்து இளையராஜாவின் ஆன்மிக நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் முதலில் 'நான் கடவுள்' படத்தில் இடம்பெற்ற 'ஓம் சிவோஹம்' பாடல் இசைக்கப்பட்டது. இதனை பிரதமர் மோடி கைகளால் தாளமிட்டப்படி ரசித்து பார்த்தார். பின்னர் தான் இசையமைத்த திருவாசகம் ஆல்பத்தில் இடம்பெற்ற மாசற்ற ஜோதி பாடலை இளையராஜா பாடினார்.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....




நான் எப்பொழுதெல்லாம் நிர்வாகத்தில் இருந்தேனோ அப்பொழுதெல்லாம் அரசாங்க மருத்துவமனைகளை மேம்படுத்துவதற்காக தனிக் கவனம் செலுத்தியிருக்கிறேன் தமிழகத்தில் அனைத்து மருத்துவமனையிலும் மக்களுக்கான முழுமையான வசதி இருக்க வேண்டும் என்பதே எனது எண்ணம்.

**- தமிழிசை**




எங்களது கூட்டணி மக்கள் விரும்பும் கூட்டணி. முதன் முறையாக தமிழக மக்கள் கூட்டணி ஆட்சிக்கு வாக்களிக்கப் போகின்றனர். ஆட்சி அதிகாரம் எல்லோருக்கும் பகிர்ந்தளிக்கப்படும்போதுதான் ஊழல் முறைகேடு இல்லாமல் மக்களுக்கு தேவையான திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதை மக்கள் விரும்புகின்றனர்.

**- தினகரன்**



கோரிக்கைகளை வலியுறுத்தி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்ட இடைநிலை ஆசிரியர்கள், செப்டம்பர் மாதத்தில் சிறை நிரப்பும் போராட்டத்தை மேற்கொள்வதாக அறிவித்துள்ளனர். இந்த நிலையில் இடைநிலை ஆசிரியர்களின் 'சம வேலைக்கு சம ஊதியம்' கோரிக்கையை அரசு நிறைவேற்ற வேண்டும்.

**- ஓ.பன்னீர் செல்வம்**



ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் ஒதுக்கப்பட்ட நிதியுடன், கடந்த 11 ஆண்டு கால தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசின் நிதி ஒதுக்கீட்டை ஒப்பிட்டுப் பார்த்துள்ளார் பிரதமர். இதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லையே.! இந்தியாவின் பொருளாதாரம் வளர்ச்சியடையும்போது, வருடாந்திர பட்ஜெட்டும் அதிகரிக்கவே செய்யும்.

**- ப.சிதம்பரம்**



**குற்றாலம்பேரூராட்சியில்உள்ளசிற்றருவியினைபார்வையிட்டுஆய்வுமேற்கொள்ளதென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்த வனம் மற்றும் கதர்துறை அமைச்சர் ராஜகண்ணப்பனை கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர், மலர்க்கொத்து கொடுத்து வரவேற்றார். உடன் மாவட்ட வன அலுவலர் அகில்தம்பி உள்ளார்.**

<u>கோவில்பட்டியில்</u>

# அதிமுக இளைஞர் இளம்பெண்கள் பாசறை நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் : கடம்பூர் ராஜூ எம்எல்ஏ பங்கேற்பு




**கோவில்பட்டி ஜூலை 28**

கோவில்பட்டி ஶ்ரீ மஹாலில் வைத்து அதிமுக தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை நிர்வாகிகளுக்கு அதிமுக பொதுச் செயலாளர் சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் எடப்பாடி கே பழனிச்சாமி அவர்களின் மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம் என்கிற பிரச்சார எழுச்சி சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாக வருகின்ற ஜூலை 31, ஆகஸ்ட் 1ம் தேதிகளில் தூத்துக்குடி வடக்கு மாவட்டத்தில் விளாத்திகுளம், கோவில்பட்டி, ஓட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதிகளுக்கு வருகை தந்து பிரச்சார எழுச்சி சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

இது தொடர்பாக இளைஞர் இளம்பெண்கள் பாசறை சார்பில் எவ்வாறு சிறப்பான வரவேற்பு அளிப்பது, சுவர் மற்றும் செய்தித்தாள்கள் விளம்பரம், பேனர்கள் வைப்பது உள்ளிட்ட முன்னேற்பாடுகள் குறித்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அதிமுக தூத்துக்குடி வடக்கு மாவட்ட இளைஞர் இளம்பெண்கள் பாசறை செயலாளரும் கோவில்பட்டி நகர் மன்ற உறுப்பினருமான எம்ஆர்வி கவியரசன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக அதிமுக அமைப்பு செயலாளர் தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜூ எம்எல்ஏ அவர்கள் கலந்து கொண்டு பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் நகர செயலாளர் விஜயபாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் இராமச்சந்திரன், மாநில வழக்கறிஞர் பிரிவு துணை செயலாளர் ஈஸ்வரமூர்த்தி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு செயலாளர் ஶ்ரீதர், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜி .எம். சங்கர்கணேஷ், மாவட்ட கலைப் பிரிவு செயலாளர் நவநீதகிருஷ்ணன், இளைஞர் இளம் பெண்கள் பாசறை நிர்வாகிகள் முருகேஸ்வரி, சத்யா, இராதாகிருஷ்ணன், ஹரிஹரன், தர்ஷன், செல்வம் ,அரவிந்த், ராம்மோகன் பாலசுப்பிரமணியம், மாரிக்கண்ணன் ,சூரியா, ராகுல், அம்பானி, பிரவின், தினேஷ்குமார், அருண் பாலாஜி, மணிகண்டன், அஜித், ஆறுமுகம், சபேஸ், கார்த்திகேயன், பழனிமுருகன், சுப்புராஜ், அருண்குமார், மற்றும் அதிமுக இளைஞர் இளம்பெண்கள் பாசறையின் நகர ஒன்றிய பேரூராட்சி செயலாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்

# இலத்தூரில் இலவச கண் பரிசோதனை சிகிச்சை முகாம்: பழனிநாடார் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



**தென்காசி ஜூலை.28:**

கல்வித்தந்தை திரு.காங்கிரஸ் பொன் பாண்டியன் அறக்கட்டளை, பாண்டிய ராணி அறக்கட்டளை தலைமையில், தென்காசி ப்ரோ விஷன் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய மாபெரும் இலவச கண் பரிசோதனை சிகிச்சை முகாம் வெகு சிறப்பாக இலத்தூரில் நடைபெற்றது.

இலத்தூர் இலட்சுமி அரிகர உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியினை தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனிநாடார் எம்எல்ஏ துவக்கி வைத்தார். முகாமில் 200க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு சர்க்கரை கண் நோய், கண் நீர் அழுத்த நோய், கண்புரை, கிட்டப்பார்வை, தூரப்பார்வை, கருவிழியில் புண், விழித்திரை நோய், இரத்த கசிவுக்கான லேசர் சிகிச்சை, குழந்தைகளின் கண் நோய் போன்ற கண் சம்மந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் இலவச கண் பரிசோதனை செய்து ஆலோசனைகள் பெற்றனர். கண் பரிசோதனைகள், ப்ரோ விஷன் தலைமை கண் மருத்துவர் ராஜகுமாரி, கண் மருத்துவர் விஜய் மற்றும் பத்திற்கும் மேற்பட்ட மருத்துவமனை ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டன. முகாமில் பங்கேற்றவர்களில் தேவைப்படுவோருக்கு மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டன. கண் கண்ணாடி தேவைப்படுவோருக்கும் 50 சதவீதம் சலுகை விலையில் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

இம்முகாமினை ப்ரோ விஷன் கண் மருத்துவமனை இயக்குனர் நவீன், தலைமை கண் மருத்துவர் ராஜகுமாரி மற்றும் அறக்கட்டளை நிர்வாகிகள் ஞான ரூபன் காங்கிரஸ் பொன் பாண்டியன், தர்ஷினி செல்வராஜ் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.இந்நிகழ்ச்சியில் காங்கிரஸ் சட்டநாதன், கதிரவன், பள்ளி தலைமை ஆசிரியர் வெங்கடேஸ்வரன் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டு முகாமினை சிறப்பித்தனர்.

முகாமில் பங்கு பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும் " என் உடல் நலமும் எனது நல்வாழ்வும் என்ற உணவு குறித்த கையேடு இலவசமாக வழங்கப்பட்டது.



**தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளராக பொறுப்பேற்று மூன்றாம் ஆண்டில் அடி எடுத்து கழகப் பணியில் சிறப்பாக செயலாற்றும் ஜெயபாலனுக்கு தென்காசி அறிவாலயத்தில் தொண்டர்கள் பட்டாசுகள் வெடித்து கேக் வெட்டி மாலை, சால்வை அணிவித்து வீரவாள் வழங்கி கொண்டாடினர்.**

# செந்தூர் எக்ஸ்பிரசில் 24 பெட்டிகள் இணைக்கப்படும் : ரயில்வே பொதுமேலாளர் ஆர்.என்.சிங் தகவல்



**திருச்செந்தூர் ஜூலை 28**

திருச்செந்தூர் - சென்னை அதிவிரைவு ரயிலில் 24 பெட்டிகள் இணைக்கப்படும் என்று தென்னக ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங் தெரிவித்தார்.

திருச்செந்தூர் ரயில் நிலையத்தில் அம்ரித் பாரத் திட்டத்தின் கீழ் ரூ. 17.5 கோடியில் காத்திருக்கும் அறை, மாற்றுத்திறனாளி பயணிகள் காத்திருக்கும்- தங்கும் அறைகள், மின்தூக்கி, இருசக்கர, நான்கு சக்கர வாகன நிறுத்தம், நவீன சுகாரதார வளாகம், வாட்டர் கூலர் உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன்.இப்ப பணிகளை நேற்று ஆய்வு செய்த ஆர்.என்.சிங், திட்டப் பணிகள் குறத்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திருச்செந்தூர் ரயில் நிலையத்தில் அம்ரித் பாரத் திட்டப் பணிகளை ஆய்வு செய்தோம். அப்பணிகள் 60 சதவீதத்திற்கு மேலாக நிறைவு பெற்றுள்ளன. அதில் குளிர்சாதன காத்திருப்போர் அறைகளில் சில மாற்றங்கள் செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.திட்டப் பணிகள் அக்டோபர் 15ஆம் தேதிக்குள் நிறைவுற்று பயன்பாட்டுக்கு வரும். திருச்செந்தூர்- திருநெல்வேலி வரையிலான நிலையங்களில் நடைபெற்று வரும் நடைபாதை விரிவாக்க பணிகள் நிறைவுற்றதும் செந்தூர் அதிவிரைவு ரயிலில் (திருச்செந்தூர்-சென்னை) 24 பெட்டிகள் இணைக்கப்படும். திருச்செந்தூர்-பாலக்காடு விரைவு ரயிலிலும் கூடுதல் பெட்டிகள் இணைக்கப்படும்.வந்தே பாரத் ரயிலை திருச்செந்தூர் வரை இயக்குவதற்கான திட்டமோ, திருச்செந்தூர்- தூத்துக்குடிக்கு புதிய ரயில் வழித்தடம் அமைப்பதற்கான திட்டமோ தற்போது இல்லை. அதேவேளையில், திருச்செந்தூர்-சென்னைக்கு நேரடி ரயில் இயக்குவது குறித்து பரிசீலிக்கப்படும் என்றார். ஆய்வின் போது, மதுரை கோட்ட மேலாளர் சரத் ஸ்ரீ வத்ஸவா, கோட்ட மூத்த வணிக மேலாளர் கணேஷ் உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

# சங்கரன்கோவில் நகராட்சியில் ஆடித்தபசு திருவிழா தொடர்பான ஆலோசனை கூட்டம்




**சங்கரன்கோவில், ஜூலை 28-**

சங்கரன்கோவிலில் ஆடித்தபசு திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சங்கரநாராயண சுவாமி கோயில் ஆடித்தபசு திருவிழா தொடர்பான ஆலோசனை கூட்டத்திற்கு எம்.பி., ராணி ஸ்ரீகுமார் தலைமை வகித்தார். ஆர்.டி.ஓ., கவிதா, டி.எஸ்.பி., செங்கோட்டு வேலவன், நகராட்சி கமிஷனர் சாம்கிங்ஸ்டன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகராட்சி துணை தலைவர் கண்ணன் வரவேற்றார். தாசில்தார் பரமசிவன், டவுண் இன்ஸ்பெக்டர் சேகர், போக்குவரத்து இன்ஸ்பெக்டர் பிரபு, சப் இன்ஸ்பெக்டர் பிரபா, நகராட்சி சுகாதார அலுவலர் வெங்கட்ராமன் மற்றும் பல்வேறு அரசு துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் ஆடித்தபசு திருவிழா தொடர்பாக குடிநீர், சுகாதாரம், தற்காலிக பஸ் ஸ்டாண்ட் அமைத்தல், பக்தர்களின் பாதுகாப்பு, போக்குவரத்து உட்பட பல்வேறு வசதிகள் தொடர்பாக ஆலோசனை நடைபெற்றது.

<u>கோவில்பட்டியில்</u>

# திருவள்ளுவர் மன்ற ஆய்வுப் பொழிவு கூட்டம்



**கோவில்பட்டி ஜூலை 28**

கோவில்பட்டி அஞ்சல் அலுவலக தெருவில் உள்ள திருவள்ளுவர் மன்ற கூட்ட அரங்கில் வைத்து 54 ஆவது ஆண்டு ஆய்வுப் பொழிவு கூட்டம் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் மற்றும் கலைஞர்கள் சங்க மாவட்டத் தலைவர் கு. ராமசுப்பு தலைமையில் நடந்தது. திருவள்ளுவர் மன்ற செயலாளர் நம். சீனிவாசன் வரவேற்புரை ஆற்றினார். ஏடறியா தமிழர்கள் தந்த இலக்கியத்தின் விழுமியங்கள் நாட்டுப்புறப் பாடல் காட்டும் சமூகப் பார்வை தொடர் 2 தீராத காதல் எனும் தலைப்பில் ஆய்வு பொழிவு நடந்தது. முன்னாள் தலைமை ஆசிரியர் இந்திராணி முன்னிலை வைத்தார். பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரி நாட்டார் வழக்காற்றியல் துறை உதவி பேராசிரியர் மை. பீட்டர் ஆரோக்கிய ராசு சிறப்புரை யாற்றினார். சுபா நகர் சுப்புலட்சுமி வாழ்த்துரை வழங்கினார். கோவில்பட்டி காமராசர் பதின்ம பள்ளி முதல்வர் முனைவர் கி. பிரபு கருத்துரை வழங்கினார். திருவள்ளூர் மன்ற தலைவர் கருத்தப் பாண்டியன் நன்றி கூறினார். மன்ற துணைத் தலைவர் திருமலை முத்துச்சாமி நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ஏராளமான தமிழ் பற்றாளர்கள் திருவள்ளூர் மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# முதல் உதவி விழிப்புணர்வு நிகழ்ச்சி

**தென்காசி ஜூலை.28:**

இந்து சமய அறநிலையத்துறை மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட முதலுதவி விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் முதலுதவி பயிற்சி குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரியில் அலெர்ட் நிறுவனம் நீல கண்டன் மூலம் நடத்தப்பட்டது.

மனித உயிர் மீட்பில் முதல் உதவியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் முதலுதவி விழிப்புணர்வு நிகழ்ச்சியை கல்லூரி முதல்வர் முனைவர். அமிர்தவல்லி தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு முதற்கட்ட சிகிச்சையின் அவசியம், அவசர நிலையில் செய்ய வேண்டிய அடிப்படை நடவடிக்கைகள் பற்றி விரிவாக விளக்கப்பட்டது. மேலும் முதலுதவி அறிவு இல்லாதது, பல உயிரிழப்புகளுக்கு காரணமாகிறது. வீட்டிலும் கல்லூரியிலும் ஒருவராவது முதலுதவி பயிற்சி பெற்றிருக்க வேண்டும்'' என தெரிவித்தார். பின்னர் மாணவர்களுக்கு செயல் விளக்கம் மூலம் காயம், மயக்கம், மூச்சுத்திணறல் போன்ற சூழ்நிலைகளில் எவ்வாறு உதவுவது என்பதைக் கற்றுக் கொடுக்கப்பட்டது.மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த நிகழ்ச்சியில் ஆர்வமாக கலந்துகொண்டு பல தகவல்களை கற்றுக் கொண்டனர். மாணவர்களின் சுயபாதுகாப்பு திறனை மேம்படுத்தும் வகையில் சிறப்பான முனைப்பாகும் . இந்த நிகழ்ச்சியை சுகாதார பராமரிப்பு குழு உறுப்பினர்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

**மழைநீர் உயிர்நீர்**

<u>தென்காசி வடக்கு மாவட்டத்திற்கு வருகை தந்த</u>

# அமைச்சர் டி.ஆர்.பி. ராஜாவிற்கு குருக்கள்பட்டியில் ராஜா எம்.எல்.ஏ.தலைமையில் உற்சாக வரவேற்பு



**சங்கரன்கோவில். ஜூலை.28-**

தென்காசி வடக்கு மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி மேலநீலிதநல்லூர் ஒன்றியம் குருக்கள்பட்டி சின்னக்கோவிலான்குளம் கிராமத்தில் சிப்காட் தொழில்பூங்கா அமைக்க உள்ள இடங்களை ஆய்வு செய்திட தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர். டி.ஆர்.பி.ராஜா, மற்றும் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம் எல் ஏ ஆகியோர் வருகை தந்தனர். அவர்களுக்கு குருக்கள் பட்டியில் வைத்து ஒன்றிய செயலாளர் பெரியதுரை தலைமையில் பூர்ண கும்ப மரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் மாநில மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர் செண்பகவிநாயகம், மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் முத்துச்செல்வி, தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு, மாவட்ட துணைச் செயலாளர் ராஜதுரை, ஒன்றியசெயலாளர்கள் லாலாசங்கரபாண்டியன், கடற்கரை, கிறிஸ்டோபர்,அன்பரசு, பால்ராஜ் நகரசெயலாளர்கள் சங்கரன்கோவில் பிரகாஷ், புளியங்குடி கிழக்கு அந்தோணிசாமி, மேற்கு நாகூர் கனி, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இளைஞரணி முகேஷ், மாணவரணி உதயகுமார், தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் கிப்ட்சன், பொறியாளர் அணி பசுபதிபாண்டியன், சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு தலைவர் மரியலூயிஸ் பாண்டியன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு தலைவர் ராஜ் என்ற கருப்பசாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் சுந்தர்ராஜ் , மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் இலக்கிய அணி கணேசன், வர்த்தக அணி செந்தில்குமார், இளைஞர் அணி ராஜ், ராஜராஜன், அன்சாரி, விளையாட்டு மேம்பாட்டு அணி மகாராஜன், தொழிலாளர் அணி முத்துப்பாண்டி, விவசாய அணி முத்துப்பாண்டியன் ,திருமலைக்குமார், வக்கீல் அணி பொன்ராஜ், தனசேகரன், மாணவரணி வீரமணி, விவசாய தொழிலாளர் அணி முருகன், மாவட்ட பிரதிநிதிகள் சண்முகபாண்டியன், செந்தூர்பாண்டியன், தங்கதுரை, தொமுச மண்டல அமைப்புச் செயலாளர் மைக்கேல் நெல்சன், சங்கரன்கோவில் வார்டு செயலாளர் வாழைக்காய் துரைபாண்டியன், ஒன்றிய துணைச் செயலாளர்கள் சின்னக்குருசாமி, மணிமேகலை, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள் இளைஞரணி கார்த்திக், பொறியாளர் அணி மனோஜ் குமார் தொண்டர் அணி பழனிவேல் முருகன் மாணவரணி ராஜதுரை, தகவல் தொழில் நுட்ப அணி குட்டி ராஜ், சுற்றுச்சூழல் அணி முத்துப்பாண்டியன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை ஈஸ்வரன், விளையாட்டு அணி கோட்டைபாண்டி, இளைஞரணி ராஜசிங்கம், ரமேஷ்குமார், பிரதீப்குமார், சிவா, முத்துக்குமார் மற்றும் கிளை செயலாளர்கள் சுகுமாரன், செந்தில்குமார், மகேஷ் குமார், வரதராஜன், தமிழ்ச்செல்வன், எம்துரை, கருத்தபாண்டியன், பூச்சியப்பன், நாகராஜன், வேல்துரை, கருப்பசாமி, மரியசுந்தர்ராஜ், பாபு, அந்தோணிராஜ் ,பொன்ராஜ் ,முத்தரசு, ராமகிருஷ்ணன், சிவசுப்பிரமணியன், திலீப், நவமணிராஜ் ,கனகராஜ், பரமையா, முருகன், காசிப்பாண்டியன்,முத்துராமலிங்கம், கணேசன், ஊராட்சி மன்ற தலைவர் மகேஷ், சுரேஷ், கருத்தபாண்டி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வேல்சாமி, குருக்கள்பட்டி கிளை நிர்வாகிகள் பன்னீர் செல்வம், சண்முகையா, பாலசுப்பிரமணியன், செல்லத்துரை, அறிவழகன், முகேஷ் குமார், பெரியசாமி, ராமர்பாண்டியன், குருசாமி, அண்ணாமலை மற்றும் ஊர் பொதுமக்கள் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

# எஸ்டிபிஐ கூட்டணியை வெற்றியடைய களப்பணியாற்றுங்கள்: பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் மாநில பொதுச்செயலாளர் பேச்சு




தென்காசி ஜூலை.28:

தென்காசி மாவட்ட எஸ்டிபிஐ கட்சியின் சார்பில் சட்டமன்ற தொகுதி நிர்வாகிகள் மற்றும் பூத்கமிட்டி பொறுப்பாளர்கள் கலந்தாய்வு கூட்டம் தென்காசியில் வைத்து நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட துணைத்தலைவர் முகம்மது நைனார் தலைமை தாங்கினார்.மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர் ஷேக் முகம்மது ஒலி வரவேற்புரை யாற்றினார். மாவட்ட பொதுச்செயலாளர் செய்யதுமஹ்மூத் துவக்க உரையாற்றினார். மாவட்ட செயற்குழு உறுப்பினர் யாசர்கான், பரக்கத் நிஷா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக மாநில பொதுச்செயலாளர் நிஜாம் முஹைதீன் கலந்து கொண்டு எதிர்வருகின்ற சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்வது குறித்தும், பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கினார். மேலும் அவர் பேசுகையில்

" எஸ்டிபிஐ கட்சி இடம் பெறுகின்ற கூட்டணியை வெற்றியடைச்செய்ய அனைத்து பொறுப்பாளர்களும் கடுமையாக தேர்தல் பணியாற்ற வேண்டும் " என்பதை வலியுறுத்தி சிறப்புரையாற்றினார்.கூட்டத்தில் உலகப்புகழ்பெற்ற சுற்றுலா தலமான குற்றாலத்திற்கு ஆண்டு தோறும் லட்சக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றர். இப்பகுதியில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் புதிய பொழுதுபோக்கு அம்சங்கள் , நவீன கார்பார்க்கிங் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

மாவட்ட செயலாளர் அப்துல் பாசித் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது. கூட்டத்தில் தொகுதி நிர்வாகிகள் பூத் கமிட்டி பொறுப்பாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

<u>சங்கரன்கோவில் அருகே</u>

# புத்தர் கோயிலில் உலக அமைதி மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு முகாம்



**சங்கரன்கோவில். ஜூலை.28-**

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் வடக்கு புதூரில் அமைந்திருக்கும் வேல்ஸ் பப்ளிக் பள்ளியின் சார்பாக வீரிருப்பில் அமைந்துள்ள புத்தர் கோயிலில் வைத்து பள்ளியில் பயிலும் 9-ஆம் வகுப்பு மாணவ-மாணவியர் கலந்து கொண்ட சுற்றுப்புறச் சூழல் மற்றும் உலக அமைதி விழிப்புணர்வு முகாம் மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. இம்முகாமில் மாணவ-மாணவியர் கோயிலின் சுற்றுப்புறத்தை தூய்மை செய்தனர். மரக்கன்றுகளை கோயிலின் சுற்றுப்புறத்தில் நட்டனர். முகாமின் சிறப்பு நிகழ்வாக உலக அமைதி வேண்டி சிறப்பு ஆராதனை நடைபெற்றது. இம்முகாமிற்கு ஏற்பாடுகளை பள்ளியின் தாளாளர் சண்முகசாமி, முதல்வர் ஜெயபாரதி மற்றும் துணை முதல்வர் அகல்யா ஆகியோர் சிறந்த முறையில் செய்திருந்தனர்.



**ஆயிரப்பேரி பகுதியில் உங்களுடன் ஸ்டாலின் முகாமை தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன் தென்காசிசட்டமன்றதொகுதிபார்வையாளர்கலைகதிரவன் ஆகியோர் துவக்கி வைத்தனர். ஒன்றிய செயலாளர் அழகுசுந்தரம், மாவட்ட பஞ்சாயத்து துணை தலைவர் உதய கிருஷ்ணா உடனிருந்தனர்.**

# திருச்செந்தூரில் இருந்து சென்னைக்கு நேரடி ரயில் இயக்க வேண்டும்: தென்கை ரயில்வே பொதுமேலாளரிடம் கோரிக்கை



**திருச்செந்தூர், ஜூலை 28:**
திருச்செந்தூர் ரயில் நிலையத்திற்கு வருகை தந்த தென்னக ரயில்வே பொது மேலாளர் ஆர்.என்.சிங்கிடம் ஆறுமுகநேரி ரயில்வே வளர்ச்சி குழு தலைவர் தங்கமணி அளித்த மனு,

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்களும், திருச்செந்தூர் சுற்றுவட்டார பகுதியில் இருந்து சென்னை போன்ற பெரு நகரங்களுக்கு ஏராளமான வணிகர்களும், பொது மக்களும் வந்து செல்கின்றனர். எனவே திருச்செந்தூரில் இருந்து சென்னைக்கு நேரடி ரயில் இயக்க வேண்டும். திருச்செந்தூர் ரயில் நிலையத்தில் ரயில்கள் வந்து செல்வதற்கு போதுமான நடைமேடை வசதி ஏற்படுத்தும் வரை தற்காலிகமாக ஆறுமுகநேரியில் இருந்து நேரடி ரயில் சென்னைக்கு இயக்க வேண்டும். பாலக்காடு எக்ஸ்பிரஸ் ரயிலில் கூடுதல் பெட்டிகள் இணைக்க வேண்டும். திருச்செந்தூர் - தூத்துக்குடி பிரதான சாலையில் ஆறுமுகநேரி ரயில்வே கேட் நாள்தோறும் 14 முறை மூடப்படுகிறது. எனவே போக்குவரத்து நெருக்கடியை தவிர்க்கும் விதமாக ஆறுமுகநேரியில் ரயில்வே மேம்பாலம் அமைத்திட வேண்டும். திருச்செந்தூர் ரயில் நிலையத்தில் டிக்கெட் முன்பதிவு செய்யும் நேரத்தை காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை என அதிகரித்திட வேண்டும். திருச்செந்தூரிலிருந்து தினசரி காலை 8.15 மணிக்கு இயக்கப்பட்ட திருநெல்வேலி பயணிகள் ரயிலை மீண்டும் அலுவலக நேரத்திற்கு வசதியாக இயக்க வேண்டும். ஆறுமுகநேரி ரயில் நிலையத்தில் நடைமேடைகளை குறிக்கும் பதாகைகளை பொறுத்திட ரயில்வே நிர்வாகம் அனுமதி அளிக்க வேண்டும் என அந்த மனுவில் கூறப்பட்டிருந்தது.

நிகழ்ச்சியின் போது ஆறுமுகநேரி ரயில்வே வளர்ச்சி குழு செயலாளர் அமிர்தராஜ், பொருளாளர் முருகன், செயற்குழு உறுப்பினர் மனோகரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

இதே போல ஆறுமுகநேரி எஸ்.ஆர்.எஸ். கார்டன் குடியிருப்போர் நலச் சங்கம் சார்பில் காயல்பட்டினம் ரயில் நிலையம் அருகில் பயணிகள் நிழற்குடை அமைத்திட வேண்டும் என நிர்வாகிகள் கோரிக்கை மனு அளித்தனர்.

## தென்காசியில்
# முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமின் நினைவு நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு இலவச மரக்கன்றுகள்



**தென்காசி,ஜூலை.28-**
தென்காசியில் முன்னாள் ஜனாதிபதி ஏ.பி.ஜே அப்துல் கலாமின் 10வது நினைவு நாளை முன்னிட்டு பொது மக்களுக்கு இலவசமாக 500 மரக்கன்றுகள் மற்றும் மதிய உணவு வழங்கப்பட்டது.

இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியும், அணு விஞ்ஞானியுமான டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாமின் 10வது நினைவு நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது. அந்த வகையில் தென்காசி மாவட்டம் புதிய பேருந்து நிலையம் முன்பாக அப்துல் கலாம் சேவா டிரஸ்ட் மூலம் அப்துல் கலாமின் நினைவஞ்சலி கடைபிடிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் அவரது முழு திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது. தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர், போக்குவரத்து காவல் ஆய்வாளர் மணி மற்றும் பாஜக கவுன்சிலர் சங்கர் ஆகியோர் பொதுமக்களுக்கு 500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் இலவசமாக அளித்தனர். தொடர்ந்து அப்பகுதி பொதுமக்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் குத்தாலிங்கம், கிருஷ்ணன் (எ) கிச்சா, சிவமூர்த்தி, (சி.கே. ஆம்புலன்ஸ்) மாரியப்பன் ஆகியோர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்..

# நெல்லையில் மத்திய மாவட்ட திமுக சார்பில் மருத்துவ முகாம்: அப்துல்வஹாப் எம்எல்ஏ, மேயர் ராமகிருஷ்ணன் துவக்கி வைத்தனர்



**நெல்லை,ஜூலை.28-**
நெல்லை மத்திய மாவட்ட திமுக சார்பில் மாநகராட்சி 12வது வார்டில் நடந்த மருத்துவ முகாமை மத்திய மாவட்ட செயலாளர் அப்துல் வஹாப் எம்எல்ஏ, மேயர் ராமகிருஷ்ணன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

நெல்லை மாநகராட்சி - 12வது வார்டு மேகலிங்கபுரம் யாதவர் மந்தை விஸ்வநாதர் செல்வி அம்மன் கோயி லில் நெல்லை மத்திய மாவட்ட திமுக சார்பில் இன்று (ஞாயிறு) காலை மருத்துவ முகாம் நடந்தது. மாவட்ட துணைச் செயலா ளர் எஸ்வி சுரேஷ் தலைமை வகித்தார்.மருத்துவ முகாமை மத்திய மாவட்ட செயலாளர் அப்துல்வ ஹாப் எம்எல்ஏ., மேயர் ராமகிருஷ்ணன் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

நிகழ்ச்சியில் தச்சை மண்டல தலைவர் ரேவதி பிரபு, மாவட்ட துணைச் செயலாளர் மூளிகுளம் பிரபு, கவுன்சிலர்கள் சங்கர், கந்தன்மாநகர துணைச்செயலா ளர் சுதா மூர்த்தி, மாந கர செயலாளர் (கிழக்கு) வக்கீல் தினேஷ். பகுதி செயலாளர் (தெற்கு) சுப்பிரமணியன், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் காசிமணி, டாஸ்மாக் தொழிற்சங்கம் அரசன் ராஜ், மகளிரணி கிருஷ்ணவேணி, வட் டப் பிரதிநிதிகள் முத்துக்குமார், வள்ளியின்செல்வம், நயினார் கண்ணன், 12வதுவட்டச் செயலாளர் மேகை செல்வம், 14வது வட்டசெயலாளர்பி பிராஜா.பழக்கடை சங்கர் செல்வகுமார் வேம்பு விவேக்,வசந்த், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மருத்துவர் கள் டாக்டர் வெங்கடேஷ் பாபு, சுமதி, ஆகியோர் பொதுமக்களுக்கு ரத்தத் தில் சர்க்கரை அளவு, ரத்த அழுத்தம், உள்ளிட்ட பரிசோதனை மற்றும் ஆலோசனை வழங்கினர்

விழா ஏற்பாடுகளை மாவட்டத் துணைச் செயலாளர் எஸ் வி சுரேஷ் கவுன்சிலர் கோகுலவாணி சுரேஷ் செய்திருந்தனர்

# கடையநல்லூர் வேளாண் அறிவியல் மையத்தில் உழவர் பெருவிழா



**தென்காசி,ஜூலை.28-**
கடையநல்லூர் வேளாண் அறிவியல் மையத்தில் 26/7/2025 அன்று உழவர் பெருவிழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திரு சுகுமார் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சியில் முனைவர் ஷேக் N. மீரா, இயக்குனர் ATARI zone X ஹைதராபாத் அவர்கள் வேளாண் கண்காட்சிகளை திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து தலைமை உரை வழங்கி வேளாண் அறிவியல் மையத்தின் முன்னோடி விவசாயிகளுக்கு விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

அதனைத் தொடர்ந்து 40-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்கினார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க கல்வி இயக்குனர் முனைவர் பி பி முருகன் அவர்கள் சிறப்புரையாற்றினார். திரு. சசிகுமார் மாவட்ட வளர்ச்சி அலுவலர், நபார்டு, திருநெல்வேலி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து திருமதி ராஜேஸ்வரி மேலாளர் RSETI வங்கி அவர்களும் சிறப்புரையாற்றினார். திரு உதய குமார் வேளாண் உதவி அலுவலர், கடையநல்லூர் அவர்கள் சிறப்புரையாற்றினார். அதனைத் தொடர்ந்து திரு ராமச்சந்திரன் தோட்டக்கலை உதவி இயக்குனர் சங்கரன்கோவில் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். இதில் 500க்கும் மேற்பட்ட விவசாய பெருமக்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். இறுதியாக திரு இளவரசன் அவர்கள் தொழில்நுட்ப வல்லுநர் தோட்டக்கலை அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

# ஈரோட்டில் சேவை உரிமைச் சட்டத்தைக் கொண்டுவர கோரிக்கை



ஈரோடு ஜூலை 28
பத்து ரூபாய் இயக்கம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் ஆர்வலர்கள் அமைப்பு தமிழ்நாடு அரசு சேவை உரிமைச் சட்டத்தை உடனடியாக அமல்படுத்த வேண்டும், மேலும் ஊழல் மற்றும் முறைகேடுகள் குறித்து தகவல் தெரிவிப்பவர்கள் பாதுகாப்புச் சட்டத்தையும் அமல்படுத்த வேண்டும் என்று கோரியது.

கோவை மண்டல மாநாடு ஈரோட்டில், அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் நல்வினை விஸ்வராஜு தலைமையில் நடைபெற்றது. பல மாநிலங்களில், இந்தச் சட்டங்கள் அமல்படுத்தப்பட்டதாக அவர் கூறினார். நிர்வாகத்தில் ஊழல் காரணமாக மக்கள் அரசாங்கத்திடமிருந்து சேவைகளைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதால், இதுபோன்ற சட்டங்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

அதேபோல், ஊழல் மற்றும் லஞ்சம் பற்றிய தகவல்களை வழங்குபவர்கள் பல பகுதிகளில் தாக்கப்படுகிறார்கள். எனவே அச்சட்டம் அவசியமானது. நாட்டில் தற்போதுள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டம் உலகிலேயே சிறந்தது. ஆனால், அரசியல்வாதிகளின் வாய்மொழி அறிவுறுத்தல் காரணமாக, அதிகாரத்தில் இருப்பவர்கள் பொதுமக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கத் தயாராக இல்லை. திருத்தங்களைக் கொண்டு வருவதன் மூலம் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்ய மத்திய அரசும் முயன்றது. இது போன்ற நடவடிக்கைகளை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம்.

பொது புகார்கள் மீது எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யும் அதிகாரம் கொண்ட ஒரு சுயாதீன அமைப்பாக டி.வி.ஏ.சி-யை வலுப்படுத்த வேண்டும். இப்போது வழக்குகளைப் பதிவு செய்ய கலெக்டர் மற்றும் ஆளுநரின் அனுமதியைப் பெற வேண்டும். புகாரில் முதன்மையான ஆதாரம் இருந்தால், எஃப்.ஐ.ஆர் பதிவு செய்யலாம். நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய குறிப்பிட்ட காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டும். வழக்கறிஞர் வாஞ்சி நாதன் மீது தொடரப்பட்ட நீதிமன்ற அவமதிப்பு வழக்குகளை நீதிபதி வெங்கடேஷ் மூலம் கையாள்வதற்குப் பதிலாக, வழக்கை உயர்நீதிமன்றத்தின் வேறு அமர்வுக்கு மாற்ற வேண்டும். புகாரை பொதுமக்களுக்கு கசியவிடுவதும் விசாரிக்கப்பட வேண்டும். நிர்வாகத்தில், ஊழல் 90 சதவீதம் ஊடுருவியுள்ளது.

அதிகாரிகள் ஊழல்வாதிகளாக இருந்தாலும் சரி, அல்லது அவர்களை வழிநடத்திய அரசியல்வாதிகள் ஊழலில் ஈடுபடுவதாக இருந்தாலும் சரி. எனவே, நிர்வாகத்தில் ஊழலை அம்பலப்படுத்துவதில் மக்கள் இன்னும் தைரியமாக இருக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார். இயக்க நிர்வாகிகள் பி.செந்தில்நாதன், சதீஷ்குமார், பாஸ்கர், குமார், கணேசன், அர்ச்சனா, சக்திவேல், ரஞ்சித்குமார், சந்தோஷ்குமார், பெரியசாமி, சண்முகம், ராஜேஷ், கார்த்திக், கோதண்டபாணி, செந்தில்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்



தென்காசி,ஜூலை.28-
தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் அகரக்கட்டில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது

இந்த ஆலோசனை கூட்டத்தில் தென்காசி மாவட்ட செயலாளராக பாலாஜி தென்காசி கிழக்கு மாவட்ட செயலாளராக கண்ணன் ராஜ் நாடார் கீழப்பாவூர் ஒன்றிய செயலாளராக மகா பிரபு கீழப்பாவூர் ஒன்றிய இளைஞரணி செயலாளராக சுந்தர் கீழப்பாவூர் ஒன்றிய இளைஞரணி துணை செயலாளராக சீனிவாசன் கடையநல்லூர் ஒன்றிய இளைஞரணி தலைவராக கார்த்திகைக் குமார் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்ந்து எடுக்கப்பட்டார்கள் அவர்களுக்கு தமிழ்நாடு நாடார் உறவின்முறைகள் கூட்டமைப்பின் மாநில தலைவர் அகரக்கட்டு லூர்து நாடார் நியமன கடிதம் வழங்கி புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்து பேசினார்

மேலும் நம்முடைய சமுதாய பாரம்பரிய கலாச்சாரங்களை நாம் இழந்து வருகிறோம் நாடார் சமுதாய உண்மை வரலாறுகளை மறைத்து தவறான வரலாறுகளை உண்மை வரலாறாக சிலர் பதிவு செய்து வருகிறார்கள் நம்முடைய சமுதாய மக்கள் நம்முடைய சமுதாய வரலாற்றை தெரிந்து கொள்ளும் விதமாக ஊரெங்கும் வரலாற்று விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்த வேண்டும் அதிகாரத் துறையிலும் ஆட்சி துறையிலும் நாம் இன்னும் பின்தங்கிய நிலையில் தான் இருந்து வருகிறோம் இந்த நிலை மாற வேண்டும்

நம்முடைய இளைஞர்கள் போதை பழக்க வழக்கங்களில் இருந்து விடுபட வேண்டும் இதற்காக நாம் கடின முயற்சிகளையும் பயிற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று பேசினார்

இந்த நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட இளைஞரணி தலைவர் வர்கீஸ் ராஜா மாநில இளைஞரணி துணைத் தலைவர் மதிவளன் தென்காசி மேற்கு மாவட்ட தலைவர் குருசாமி நாடார் மற்றும் நிர்வாகிகள் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டனர்

## முதலியார்பட்டியில்
# பள்ளி மேலாண்மை குழு கூட்டம்



**தென்காசி,ஜூலை.28-**
கடையம் அருகிலுள்ள முதலியார்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் மேலாண்மை குழு கூட்டம் நடைபெற்றது. மேலாண்மை குழு தலைவி பரிதா அப்துல் காதர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு தலைமை ஆசிரியை முத்துலட்சுமி நாச்சியார், ஊராட்சி மன்ற தலைவி முகைதீன் பிவி அசன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி ஆசிரியை ஹெப்சிபா வரவேற்றார். ஆசிரியர் முத்துராஜா நன்றி கூறினார். கூட்டத்தில் விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களை ஊக்குவிப்பது, நம் ஸ்கூல் நம் ஊரு பள்ளி திட்டத்தைப் பற்றி விளக்குதல், உயர் கல்வி வழிகாட்டி முகாம் நடத்துதல், முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நடத்துதல், பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் சட்டம், போதைப்பொருள் இல்லாத பள்ளிக்கூடம், உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் விவாதிக்கப்பட்டது.

பள்ளி மேலாண்மை குழு சார்பில் மரக்கன்று நடப்பட்டது நிகழ்ச்சியில் மேலாண்மை குழு உறுப்பினர்கள் ராமலட்சுமி, விஜயலட்சுமி, அருணா, முகமது காசிம், மற்றும் கல்வி குழு உறுப்பினர் கட்டி அப்துல் காதர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கடையநல்லூர் நகராட்சி மற்றும் கலை அறிவில் கல்லூரி நலப்பணித்திட்ட மாணவர்கள் சார்பில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி



**கடையநல்லூர் , ஜூலை.28-**
கடையநல்லூர் நகராட்சி மற்றும் கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி சார்பில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. நகராட்சி அலுவலகத்தில் இருந்து தொடங்கிய பேரணியை #நகர்மன்றதலைவர் #மூப்பன் ஹபிபுர்ரஹ்மான் கொடி அசைத்து தொடங்கி வைத்தார். கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் ரவிச்சந்திரன், மாவட்ட மாசு கட்டுப்பாட்டு வாரியம் தமிழ்நாடு அலுவலர் நெல்லை மதி, திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக நாட்டு நலத் திட்டப் பணி ஒருங்கிணைப்பாளர் முனைவர் வெளியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தார் அங்கிருந்து தொடங்கிய பேரணி தென்காசி -மதுரை சாலை , வழியாக சென்று தினசரி மார்க்கெட் முப்புடாதி அம்மன் கோவில் முன்பு நிறைவடைந்தது. அங்கு பொதுமக்கள் முன்னிலையில் பிளாஸ்டிக் ஒழிப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர் இதில், கடையநல்லூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி நாட்டு நலப் பணி திட்ட அலுவலர் பால் மகேஷ்,சுகாதார ஆய்வாளர் சிவா மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள் தமிழ்ச் செல்வன், சண்முகசுந்தர ரேவதி, கடையநல்லூர் சப் இன்ஸ்பெக்டர் சம்சுதீன், நகர்மன்ற உறுப்பினர் அக்பர் அலி, முருகானந்தம்,உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



**தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் வே.ஜெயபாலன், விபத்தில் காயம் ஏற்பட்ட இளைஞர் அணி நிர்வாகி காமாட்சிக்கு ரூ. 20 ஆயிரம் நிதி உதவி வழங்கினார். நிகழ்ச்சியில் மாநில இளைஞரணி துணை செயலாளர் ராஜா, மாவட்ட துணை செயலாளர் கென்னடி மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணராஜா, துணை அமைப்பாளர்கள் ஐவேந்திரன் தினேஷ், ராஜ், சுப்பிரமணியன் மற்றும் மாவட்ட ,ஒன்றிய , நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.**

# பெருந்துறையில் உங்களுடன் ஸ்டாலின் முகாம்



**ஈரோடு, ஜூலை 28:**
ஈரோடு மாவட்டம் பெருந்துறை ஒன்றியத்திற்கு உட்பட்ட திருவாச்சி ஊராட்சியில் வாவிக்கடை பைபாஸ் சாலையில் உள்ள மண்ட பத்தில் 'உங்களுடன் ஸ்டா லின்' திட்ட முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில், முன்னாள் அமைச்சரும், ஈரோடு மத்திய மாவட்ட திமுக பொறுப்பாளரு மான தோப்பு வெங்க டாச்சலம் பங்கேற்று, முகாமில் பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் உடன டியாக கணினியில் பதி வேற்றம் செய்யப்பட்டு, அவர்களுக்கான ஒப்புகை சீட்டு வழங்குவதை குறித்தும் கேட்டறிந்தார்.

இந்நிகழ்ச்சியில், திமுக பெருந்துறை கிழக்கு ஒன்றிய செயலாளர் பெரியசாமி, திருவாச்சி ஊராட்சி முன்னாள் தலைவர் சோளி பிரகாஷ், மாவட்ட பிரதிநிதி கந்த சாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
11/78, Fourway Main Road, Gangaikondan, Tirunelveli-627352
Ph: 0462- 2486789
E-Mail: nellaiedi@thinaboomi.com
RNI.Regn No.66774/97
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

## இந்திய வீரர்கள் யாரும் செய்யாத சாதனை:
# இங்கிலாந்து மண்ணில் புதிய வரலாறு படைத்தார் சுப்மன்



**மான்செஸ்டர், ஜூலை 28-**

இங்கிலாந்து மண்ணில் ஒரு டெஸ்ட் தொடரில் 700 ரன்களுக்கு அதிகமாக விளாசிய இந்திய வீரர் மற்றும் கேப்டன் என்ற பெருமையை கில் பெற்றுள்ளார்.

**சுற்றுப்பயணம்...**

இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வரும் இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 2-1 என்ற கணக்கில் பின்தங்கியுள்ளது. இந்த நிலையில், கடந்த 23ம் தேதி இரு அணிகளுக்கு இடையிலான 4வது டெஸ்ட் கிரிக்கெட் மான்செஸ்டரில் உள்ள மைதானத்தில் தொடங்கியது. இதில், முதலில் பேட் செய்த இந்திய அணி 358 ரன்கள் குவித்தது. ஜோ ரூட் (150), பென் ஸ்டோக்ஸ் (141) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 669 ரன்கள் சேர்த்தது.

**கில், ராகுல் அரைசதம்...**

4ம் நாளில் 311 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணிக்கு, ஜெய்ஸ்வால், சாய் சுதர்சன் ஆகியோர் முதல் ஓவரிலேயே டக் அவுட்டாகி அதிர்ச்சி கொடுத்தனர். அதன்பிறகு, ஜோடி சேர்ந்த கேப்டன் கில் மற்றும் கே.எல்.ராகுல் ஆகியோர் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் அரைசதம் அடித்தனர். 4ம் நாள் ஆட்டநேர முடிவில் 2 விக்கெட் இழப்பிற்கு 174 ரன்கள் எடுத்தது. கில் (78), ராகுல் (87) அவுட்டாகாமல் இருந்தனர்.

**புதிய சாதனை...**

இங்கிலாந்து மண்ணில் சிறப்பாக ஆடிய கில், ஜாம்பவான்களை பின்னுக்கு தள்ளி புதிய சாதனை படைத்தார். இங்கிலாந்தில் ஒரு டெஸ்ட் தொடரில் அதிக ரன்கள் அடித்த ஆசிய வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார். முன்னாள் பாகிஸ்தான் வீரர் முகமது யூசுப் (631), டிராவிட் (602), கோலி (593) ஆகியோர் இந்தப்பட்டியலில் உள்ளனர்.

**ராகுல் 90 ரன்...**

தொடர்ந்து, 5ம் நாள் ஆட்டம் தொடங்கியதும் கே.எல். ராகுல் 90 ரன்கள் எடுத்த போது, ஸ்டோக்ஸ் பந்தில் எல்.பி.டபிள்யூ., முறையில் அவுட்டானார். மறுமுனையில் சிறப்பாக விளையாடி வரும் கில் இந்தத் தொடரில் 700 ரன்களை கடந்துள்ளார். இதன்மூலம், இங்கிலாந்து மண்ணில் ஒரு டெஸ்ட் தொடரில் 700 ரன்களுக்கு அதிகமாக விளாசிய இந்திய வீரர் மற்றும் கேப்டன் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார். இதற்கு முன்பாக இந்திய வீரர்கள் யாரும் இந்த சாதனையை படைத்ததில்லை.

**4வது சதம்...**

முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரர் சுனில் கவாஸ்கர் வெஸ்ட் இண்டீஸில் ஒரு டெஸ்ட் தொடரில் 774 ரன்கள் குவித்துள்ளார். அதேபோல, வெஸ்ட் இண்டீஸ் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, ஒரு டெஸ்ட் தொடரில் சுனில் கவாஸ்கர் 732 ரன்கள் எடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. மான்செஸ்டர் டெஸ்டில் நிதானமாக ஆடிய கேப்டன் கில் சதம் அடித்தார். இந்தத் தொடரில் அவர் அடிக்கும் 4வது சதம் இதுவாகும். இதன்மூலம் ஒரு டெஸ்ட் தொடரில் அதிக சதங்களை அடித்த இந்திய வீரர்கள் கவாஸ்கர் (4), கோலி (4) ஆகியோரின் சாதனையை சமன் செய்தார். அதேபோல, ஒரு டெஸ்ட் தொடரில் அதிக சதங்களை அடித்த கேப்டன்களான சுனில் கவாஸ்கர் (4), டான் பிராட்மேன் (4) ஆகியோரின் சாதனையையும் கில் சமன் செய்துள்ளார்.

## கவாஸ்கரின் வாழ்நாள் சாதனை:
# சமன் செய்தார் கே.எல்.ராகுல்

**மான்செஸ்டர், ஜூலை 28-**

இங்கிலாந்து மண்ணில் ஒரு தொடரில் 500+ ரன்கள் அடித்த ஆசிய தொடக்க ஆட்டக்காரர் என்ற சுனில் கவாஸ்கரின் வாழ்நாள் சாதனையை கே.எல்.ராகுல் சமன் செய்துள்ளார்.

**இந்தியா 358 ரன்கள்...**

இந்தியா - இங்கிலாந்து அணிகள் இடையிலான 4-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மான்செஸ்டரில் உள்ள ஓல்டு டிராஃபோர்டு மைதானத்தில் நடந்து வருகிறது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட் செய்த இந்திய அணி முதல் இன்னிங்சில் 358 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக சாய் சுதர்சன் 61 ரன்கள் அடிக்க, இங்கிலாந்து தரப்பில் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

**இங்கி. 669 ரன்கள் குவிப்பு...**

பின்னர் தனது முதல் இன்னிங்சை ஆடிய இங்கிலாந்து 3-வது நாள் முடிவில் 7 விக்கெட்டுக்கு 544 ரன்கள் எடுத்திருந்தது. அணி முதல் இன்னிங்சில் 157.1 ஓவர்களில் 669 ரன்கள் குவித்து ஆல்-அவுட் ஆனது. அதிகபட்சமாக ஜோ ரூட் சதம் (150 ரன்), கேப்டன் பென் ஸ்டோக்ஸ் (141 ரன்) சதமடித்து அசத்தினர். இந்திய தரப்பில் ஜடேஜா 4 விக்கெட்டும், வாஷிங்டன் சுந்தர், பும்ரா தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

**முதல் ஓவரில் 2 விக்கெட்...**

அடுத்து 311 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2-வது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணிக்கு முதல் ஓவரிலேயே பேரிடி விழுந்தது. இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளர் கிறிஸ் வோக்ஸ் வீசிய முதல் ஓவரின் 4-வது பந்தில் ஜெய்ஸ்வால் (0) ஸ்லிப்பில் நின்ற ஜோ ரூட்டிடம் கேட்ச் ஆனார். அடுத்து இறங்கிய தமிழகத்தை சேர்ந்த சாய் சுதர்சன் (0) சந்தித்த முதல் பந்திலேயே இதே போல் விக்கெட்டை தாரைவார்த்தார். ரன் கணக்கை தொடங்கும் முன்பே இரு விக்கெட்டுகள் காலியானதால் இந்திய அதிர்ச்சிக்குள்ளானது.



**ராகுல் அசத்தல்...**

இந்த நெருக்கடியான சூழலில் 3-வது விக்கெட்டுக்கு கே.எல்.ராகுலும், கேப்டன் சுப்மன் கில்லும் இணைந்தனர். பொறுமையை கடைபிடித்த இவர்கள் முழுமையாக தடுப்பாட்டத்தில் கவனம் செலுத்தினர். 4-வது நாள் ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 2-வது இன்னிங்சில் 63 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 174 ரன்கள் எடுத்துள்ளது. சுப்மன் கில் 78 ரன்களுடனும், கே.எல். ராகுல் 87 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

**சாதனை சமன்...**

இந்த தொடரில் சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்தி வரும் கே.எல்.ராகுல் இது வரை 508 ரன்கள் அடித்துள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் இங்கிலாந்து மண்ணில் ஒரு தொடரில் 500+ ரன்கள் அடித்த ஆசிய தொடக்க ஆட்டக்காரர் என்ற சுனில் கவாஸ்கரின் வாழ்நாள் சாதனையை கே.எல்.ராகுல் சமன் செய்துள்ளார். சுனில் கவாஸ்கர் 1979-ம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெற்ற ஒரு டெஸ்ட் தொடரில் 542 ரன்கள் அடித்து இந்த சாதனையை படைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## டெஸ்ட் போட்டிகளில்
# ஸ்டோக்ஸ் புதிய சாதனை

**மான்செஸ்டர், ஜூலை 28-**

டெஸ்ட் போட்டிகளில் 7000 ரன்களைக் கடந்து இங்கிலாந்து அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் சாதனை படைத்தார்.

**மான்செஸ்டரில்...**

இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் போட்டி மான்செஸ்டரில் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியில் இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 358 ரன்களுக்கு ஆட்டமிழக்க, இங்கிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் 669 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தது.

**ஸ்டோக்ஸ் 141 ரன்...**

இங்கிலாந்து அணியில் ஜோ ரூட் மற்றும் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் சதம் விளாசி அசத்தினர். ஜோ ரூட் 150 ரன்களும், பென் ஸ்டோக்ஸ் 141 ரன்களும் எடுத்தனர். இந்திய அணியைக் காட்டிலும் இங்கிலாந்து 311 ரன்கள் முன்னிலை பெற்றது. இந்திய அணி தற்போது அதன் இரண்டாவது இன்னிங்ஸில் விளையாடி வருகிறது.

**சாதனை...**

முதல் இன்னிங்ஸில் 141 ரன்கள் எடுத்ததன் மூலம், டெஸ்ட் போட்டிகளில் 7000 ரன்களைக் கடந்த பென் ஸ்டோக்ஸ் சாதனை படைத்தார். இதுவரை இங்கிலாந்து அணிக்காக 115 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள பென் ஸ்டோக்ஸ் 7,032 ரன்கள் எடுத்துள்ளார். அதில் ஒரு இரட்டைச் சதம், 14 சதங்கள் மற்றும் 35 அரை சதங்கள் அடங்கும். அவரது அதிகபட்ச ஸ்கோர் 258 ஆகும்.

**மூன்றாவது வீரர்...**

டெஸ்ட் போட்டிகளில் 7000 ரன்கள் குவித்தது மட்டுமின்றி, டெஸ்ட் போட்டிகளில் 7000 ரன்கள் மற்றும் 200 விக்கெட்டுகள் வீழ்த்திய மூன்றாவது வீரர் என்ற சாதனையையும் பென் ஸ்டோக்ஸ் படைத்துள்ளார். இதற்கு முன்பாக, கர்ஃபீல்டு சாபர்ஸ் மற்றும் ஜாக் காலிஸ் இருவரும் இந்த சாதனையைப் படைத்துள்ளனர்.

# அப்துல் கலாம் நினைவு நாள்: பிரதமர் மோடி புகழஞ்சலி

**புதுடெல்லி, ஜூலை 28-**

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏபிஜே அப்துல் கலாமின் நினைவு நாளில் பிரதமர் மோடி அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "நமது அன்புக்குரிய முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏபிஜே அப்துல் கலாமின் நினைவு நாளில் அவருக்கு அஞ்சலியை செலுத்துகிறேன். அவர் ஒரு ஊக்கமளிக்கும் தொலைநோக்கு சிந்தனையாளர், அதிசிறந்த விஞ்ஞானி, நம்பிக்கையூட்டும் வழிகாட்டி மற்றும் சிறந்த தேசபக்தராக நினைவுகூரப்படுகிறார். நமது தேசத்திற்கான அவரது அர்ப்பணிப்பு முன்மாதிரியானது. வளர்ச்சியடைந்த மற்றும் வலிமையான இந்தியாவை உருவாக்க பங்களிக்கும் வகையில் இந்திய இளைஞர்களுக்கு அவரது எண்ணங்கள் ஊக்கமளிக்கின்றன." இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் 10ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதையயொட்டி ராமேசுவரத்தில் உள்ள கலாம் நினைவிடத்தில் ஏராளமான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

## மான்செஸ்டரில் ராகுல், கில் புதிய சாதனை

**மான்செஸ்டர், ஜூலை 28-**

இங்கிலாந்துக்கு எதிராக இந்திய வீரர்கள் கே.எல்.ராகுல், ஷுப்மன் கில் புதிய சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள்.

நான்காவது டெஸ்ட்...

நான்காவது டெஸ்ட் மான்செஸ்டரில் நடைபெற்று வருகிறது. முதல் இன்னிங்ஸில் இந்தியா 358 ரன்களுக்கு ஆட்டமிழந்தது. அடுத்து களமிறங்கிய இங்கிலாந்து பேட்ஸ்மென்கள் ரன் வேட்டை நடத்தியதல் அந்த அணி முதல் இன்னிங்ஸில் 669 ரன்களை குவித்தது. மதிய உணவு இடவேளைக்கு முன்பு பேட்டிங் செய்த இந்திய அணி முதல் ஓவரிலேயே 2 விக்கெட்டுகளை இழந்து அதிர்ச்சியளித்தது. பின்னர், கே.எல்.ராகுல், ஷுப்மன் கில் இணைந்து அணியின் ஸ்கோரை உயர்த்தினார்கள்.

500க்கும் மேலாக...

நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 174/2 ரன்கள் எடுத்திருந்தது. அதில் கே.எல்.ராகுல் 210 பந்தில் 87 ரன்கள், ஷுப்மன் கில் 167 பந்தில் 78 ரன்கள் எடுத்துள்ளார்கள்.

**ஒரே தொடரில் 500க்கும் அதிகமான ரன்கள்:**

**1) 774 - சுனில் கவாஸ்கர் (மே.இ.தீ. எதிராக), 1971.**
**2) 542 - சுனில் கவாஸ்கர் (இங்கிலாந்துக்கு எதிராக), 1979.**
**3) 508* - கே.எல்.ராகுல் (இங்கிலாந்துக்கு எதிராக), 2025 ***
**4) வெளிநாடுகளில் 500க்கும் அதிகம் எடுத்த இந்தியர்கள்.**
**5) கவாஸ்கர் (774), சர்தேஷி (642) - மே.இ.தீ. எதிராக, 1970-71.**
**6) ஷுப்மன் கில் (697*), கே.எல்.ராகுல் (508*) - இங்கிலாந்துக்கு எதிராக, 2025.**

## இந்திய வீராங்கனைக்கு வெள்ளி

உலக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டிகள் ஜெர்மனியில் நடைபெற்று வருகிறது. கடைசி நாளான நேற்று மகளிருக்கான 3 ஆயிரம் மீட்டர் ஸ்டீபிள்சேஸ் போட்டி நடைபெற்றது. இதில் இந்திய வீராங்கனை அங்கிதா பந்தய தூரத்தை 9:31.99 வினாடிகளில் கடந்து வெள்ளிப்பதக்கம் வென்று அசத்தினார். ஜெர்மனியின் அடியா புட்டே 9:33.34 வினாடிகளில் கடந்து வெண்கல பதக்கம் வென்றார். இந்த போட்டியில் பின்லாந்தின் இலோனா மரியா 9:31.86 வினாடிகளில் பந்தய தூரத்தை கடந்து தங்கப்பதக்கம் வென்றார்.

## சதத்தை தவறவிட்ட கே.எல்.ராகுல்

இங்கிலாந்து, இந்தியா இடையிலான 4-வது டெஸ்ட் போட்டி மான்செஸ்டர் ஓல்டு டிராஃபோர்டில் நடைபெற்று வருகிறது. டாஸ் வென்ற இங்கிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, களமிறங்கிய இந்தியா முதல் இன்னிங்சில் 358 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இங்கிலாந்து சார்பில் ஸ்டோக்ஸ் 5 விக்கெட்டும், ஆர்ச்சர் 3 விக்கெட்டும் வீழ்த்தினர். தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 669 ரன்களுக்கு ஆல் அவுட்டானது.

இதையடுத்து, 311 ரன்கள் பின் தங்கிய நிலையில் இந்திய அணி இரண்டாவது இன்னிங்சில் களமிறங்கியது. கிறிஸ் வோக்ஸ் முதல் ஓவரில் ஜெய்ஸ்வால், சாய் சுதர்சனை வெளியேற்றி அதிர்ச்சி கொடுத்தார். அடுத்து கே.எல்.ராகுலுடன் கேப்டன் சுப்மன் கில் இணைந்தார். இந்த ஜோடி இங்கிலாந்து பந்துவீச்சை நிதானமாகக் கையாண்டது. இருவரும் அரை சதம் கடந்து அசத்தினர். இந்நிலையில், கேப்டன் கில்லுடன் இணைந்து நிதானமாக விளையாடி வந்த கே.எல்.ராகுல் 90 ரன்களில் அவுட் ஆகி சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார்.

## சச்சின் சாதனைகள்: ரூட் கருத்து

இங்கிலாந்து அணியின் முன்னணி பேட்ஸ்மேன் ஜோரூட் டெஸ்டில் அதிக ரன் எடுத்த வீரர்களில் 2-வது இடத்தை பிடித்தார். ரிக்கி பாண்டிங்கை முந்தினார். தெண்டுல்கர் 15,921 ரன் களுடன் (200 டெஸ்ட்) முதல் இடத்திலும், ஜோரூட் 13,409 ரன்னுடன் (157 போட்டி) 2-வது இடத்திலும் உள்ளார். இந்த நிலையில் தெண்டுல்கர் சாதனையை முறியடிக்க முடியுமா? என்பதற்கு ஜோரூட் அளித்த பதில் வருமாறு:- கிரிக்கெட்டின் சிறந்த வீரர் சச்சின் தெண்டுல்கர். அவர் சாதித்த அனைத்து விஷயங்களும் நம்ப முடியாதவை. நான் பிறப்பதற்கு முன்பே அவர் டெஸ்டில் அறிமுகமானார்.

சிறு வயதில் இருந்தே அவரது ஆட்டத்தை பார்த்து பின்பற்றி வருகிறேன். அவருக்கு எதிராக ஒரு டெஸ்டில் விளையாடும் வாய்ப்பை பெற்றது சிறந்ததாகும். அவர் பேட்டிங் செய்ய வரும்போது முழு ரசிகர்கள் கூட்டமும் ஆராவரம் செய்தது. அதை பார்ப்பது வினோதமாக இருந்தது. தெண்டுல்கர் சாதனையை முறியடிப்பதில் நான் கவனம் செலுத்த போகும் ஒன்றல்ல. இவ்வாறு அவர் கூறி உள்ளார். தெண்டுல்கர் சாதனையை முறியடிக்க ஜோ ரூட் இன்னும் 2,512 ரன் தேவை. தெண்டுல்கர் 2013-ம் ஆண்டு நவம்பரில் ஓய்வு பெற்றார். ஜோரூட் 2012-ம் ஆண்டு டிசம்பரில் இந்தியாவுக்கு எதிராக அறிமுகம் ஆனார்.

## கோப்பை வென்றது நியூசிலாந்து

ஜிம்பாப்வே, தென் ஆப்பிரிக்கா, நியூசிலாந்து ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் டி20 கிரிக்கெட் தொடர் ஜிம்பாப்வேயின் ஹராரே நகரில் நடந்தது. லீக் போட்டிகளின் முடிவில் நியூசிலாந்து தென் ஆப்பிரிக்கா அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறின. இதில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் நியூசிலாந்து, தென் ஆப்பிரிக்கா அணிகள் மோதின. டாஸ் வென்ற தென் ஆப்பிரிக்க அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் பேட்டிங் செய்த நியூசிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 180 ரன்கள் குவித்தது. கான்வே, ரச்சின் ரவீந்திரா தலா 47 ரன்னும், சைப்பட் 30 ரன்னும் எடுத்தனர். தென் ஆப்பிரிக்கா சார்பில் லுங்கி நிகிடி 2 விக்கெட் வீழ்த்தினார்.

இதையடுத்து, 181 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி தென் ஆப்பிரிக்கா களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் பிரெடொரியஸ் அரை சதம் கடந்து 51 ரன்னில் ஆட்டமிழந்தார். ஹென்ரிக்ஸ் 37 ரன்னும், டிவால்டு பிரேவிஸ் 31 ரன்னும் எடுத்தனர். கடைசி ஓவரில் 7 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் தென் ஆப்பிரிக்கா 3 ரன்கள் மட்டுமே எடுத்தது. இறுதியில், தென் ஆப்பிரிக்கா 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 177 ரன்கள் எடுத்தனர். இதன்மூலம் 4 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற நியூசிலாந்து முத்தரப்பு தொடரின் கோப்பையைக் கைப்பற்றியது.

# நலம் பெற்று வீடு திரும்பினேன்: முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு

**சென்னை, ஜூலை 28-**

நலம் பெற்று வீடு திரும்பினேன் என முதல்வர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், சிகிச்சை முடிந்து நேற்று வீடு திரும்பினார். இந்த நிலையில், அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;



"நலம்பெற்று வீடு திரும்பினேன்.. மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அக்கறையுடன் விசாரித்து, நலம் பெற வாழ்த்திய அனைத்து அரசியல் இயக்கத் தலைவர்கள் - மக்கள் பிரதிநிதிகள் - நீதியரசர்கள் - அரசு அதிகாரிகள் - திரைக் கலைஞர்கள் - என் உயிரோடு கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகள் உள்ளிட்ட தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

மருத்துவமனையில் சிறப்பான சிகிச்சையளித்து, நான் விரைந்து நலம்பெற உறுதுணையாய் இருந்த மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மீண்டும் அன்பும், நன்றியும்! உங்களுக்காக உழைப்பை வழங்கும் என் கடமையை என்றும் தொடர்வேன். இவ்வாறு அதில் அவர் தெரிவித்துள்ளார்.

## பாரதத்தின் பொற்காலங்களில் ஒன்று:
# சோழ சாம்ராஜ்ஜியம் குறித்து பிரதமர் மோடி பெருமிதம்

**தஞ்சை, ஜூலை 28-**

சோழ சாம்ராஜ்ஜியம் பாரதத்தின் பொற்காலங்களில் ஒன்று என்று பிரதமர் நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

கங்கை கொண்ட சோழப்புரத்தில் நடைபெற்ற ஆடி திருவாதிரை விழாவில் கலந்துகொண்டார். அப்போது இளையராஜாவின் இசை நிகழ்ச்சியை கேட்ட பிரதமர் மோடி, சோழனின் நினைவு நாணயத்தை வெளியிட்டார். இதன் பின்னர் நிகழ்ச்சியில் பிரதமர் பேசியதாவது;

வணக்கம் சோழ மண்டலம். சிவனின் தரிசனமும், இளையராஜாவின் இசையும் என் ஆன்மாவை ஆனந்தத்தில் ஆழ்த்திவிட்டது. பாரத நாட்டின் வளர்ச்சிக்காக என் வேண்டுதலை சிவனிடம் வைத்தேன். 1000 ஆண்டுகள் நிறைவுசெய்த பிரகதீஸ்வரர் ஆலயத்தில் இறைவனை தரிசித்த பெரும் பேறு எனக்கு கிடைத்துள்ளது. கங்கை கொண்ட சோழபுரம் குறித்த கண்காட்சியை கண்டு வியந்தேன்.

சோழ அரசர்களின் அரசியல், வணிக தொடர்பு மாலத்தீவு தொடங்கி கிழக்கு ஆசிய நாடுகள் வரை பரவி இருந்தது. சோழர்களின் சாதனைகள் இந்தியாவின் பலத்திற்கு எடுத்துக்காட்டு. ராஜராஜன், ராஜேந்திர சோழன் இரு பெயர்களும் பாரதத்தின் அடையாளங்கள்.

பிரிட்டனுக்கு முன்பே ஜனநாயகத்துக்கான முன்னோடி சோழராட்சி. ஜனநாயகத்தின் பிறப்பிடமாய் சோழர்களின் குடவோலை முறை திகழ்ந்தது. நீர் மேலாண்மையில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் சோழர்கள். உலகின் கட்டடவியல் அற்புதங்களில் ஒன்று கங்கை கொண்ட சோழபுரம். பண்பாட்டால் நாட்டை ஒருங்கிணைத்தவர்கள் சோழர்கள். சோழ சாம்ராஜ்ஜியம் பாரதத்தின் பொற்காலங்களில் ஒன்று. சைவ பாரம்பரியத்தில் தமிழகம் முக்கிய மையமாக திகழ சோழர்களே காரணம்.

பாரதத்தின் வலிமையை ஆபரேஷன் சிந்தூர் உணர்த்தியது. நாடு முழுவதும் ஆபரேஷன் சிந்தூரை மக்கள் கொண்டாடி வருகின்றனர். புதிய இந்தியாவுக்கு வரைபடம் தருகிறது சோழர் சாம்ராஜ்ஜியம். இவ்வாறு அவர் பேசினார்

# ராஜேந்திர சோழன் நினைவு நாணயத்தின் சிறப்பம்சங்கள்




**தஞ்சை, ஜூலை 28-**

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள நாணயத்தில், இந்தியாவின் இறையாண்மையை அடையாளப்படுத்தும் வகையில், தமிழில், வாய்மையே வெல்லும் என பொருள்படும் வகையிலான சத்யமேவ ஜெயதே என பொறிக்கப்பட்டு உள்ளது.

ராஜேந்திர சோழனின் முப்பெரும் விழா தஞ்சையில் நேற்று நடந்தது. இதில் கலந்து கொள்வதற்காக, திருச்சியில் இருந்து பிரதமர் மோடி தஞ்சைக்கு புறப்பட்டார். தஞ்சைக்கு வந்த பிரதமர் மோடி, வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை, தோளில் அங்கவஸ்திரம் என தமிழக முறையிலான பாரம்பரிய உடை அணிந்து காணப்பட்டார்.

கங்கைகொண்ட சோழபுரம் கோவிலில் இறை வணக்கம் செலுத்தியதுடன், ஆடி திருவாதிரையை முன்னிட்டு, தீபாராதனை காட்டி வழிபாடும் நடத்தினார். ஆடி திருவாதிரை விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அவர், ராஜேந்திர சோழனின் நினைவு நாணயம் ஒன்றையும் வெளியிட்டார்.

இந்த நாணயம் ரூ.1,000 மதிப்பை கொண்டது. அதன் முன்புறம், இந்தியாவின் இறையாண்மையை அடையாளப்படுத்தும் வகையில், தமிழில், வாய்மையே வெல்லும் என பொருள்படும் வகையிலான சத்யமேவ ஜெயதே என பொறிக்கப்பட்டு உள்ளது. அதன் மேல், அசோக சின்னம் உள்ளது. இடதுபுறத்தில், தேவநாகரியில் பாரத் என்றும் வலதுபுறத்தில், ஆங்கிலத்தில் இந்தியா என்றும் பதிக்கப்பட்டு உள்ளது. அசோகா தூணுக்கு கீழே, ரூபாய்க்கான அடையாளமும், ஆயிரம் என்ற எண்ணும் பொறிக்கப்பட்டு உள்ளன.

நாணயத்தின் பின்புறம், பேரரசர் ராஜேந்திர சோழன் 1-ன் கடற்படையை காட்சிப்படுத்தும் வகையில், நாணயத்தின் மையத்தில் உருவம் பதிக்கப்பட்டு உள்ளது. இதேபோன்று, பேரரசர் ராஜேந்திர சோழன் 1-ன் ஆயிரம் ஆண்டுகள் கடற்படை பயணம் என்று ஆங்கிலம் மற்றும் தேவநாகரியில் வரிவடிவில் பொறிக்கப்பட்டு உள்ளது.

வட்ட வடிவில் 44 மி.மீ. விட்டம் கொண்ட இந்த நாணயம் 99.9 சதவீதம் தூய வெள்ளியால் உருவானது. 40 கிராம் எடை கொண்டது. 11-ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பேரரசர் ராஜேந்திர சோழன், தென்னிந்தியா முழுவதும் வெற்றி பெற்றதுடன், தென்கிழக்கு ஆசியாவில் கடற்படையை நிறுவி வெற்றி கண்டவர். கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகரை உருவாக்க திட்டமிட்டார்.

அதற்காக கங்கையாற்றில் புனித நீரை கொண்டு வர அவருடைய ராணுவம் புறப்பட்டது. செல்லும் வழியெல்லாம் பல அரசுகளை வீழ்த்தி வெற்றி பெற்றது. பின்னர் புனித நீரை திரும்ப கொண்டு வந்து, புதிய நகரம் நிறுவப்பட்டது.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# தேசப்பற்றை துருப்புச்சீட்டாக பயன்படுத்துவதை நிறுத்துங்கள்
## பி.சி.சி.ஐ.க்கு டேனிஷ் கனேரியா கோரிக்கை

லாகூர், ஜூலை 28-

தேசப்பற்றை துருப்புச் சீட்டாக பயன்படுத்துவதை பி.சி.சி.ஐ. நிறுத்த வேண்டும் என முன்னாள் பாகிஸ்தான் வீரர் டேனிஷ் கனேரியா தெரிவித்துள்ளார்.

**ஆசியக் கோப்பை...**

இந்த ஆண்டு செப்டம்பர் 9-ம் தேதி முதல் 28-ம் தேதி வரை ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் நடைபெறுகின்றன. இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**இரட்டை நிலைப்பாடு...**

இந்நிலையில், பி.சி.சி.ஐ.-யின் இரட்டை நிலைப்பாட்டைக் கேள்விக்குட்படுத்தியுள்ளார் பாகிஸ்தான் முன்னாள் லெக் ஸ்பின்னர் டேனிஷ் கனேரியா. அதேபோல் உங்களுக்குகு சவுகரியப்படும்போது 'தேசப்பற்று' என்ற துருப்புச் சீட்டைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும் என்றும் பி.சி.சி.ஐ.-யைக் கண்டித்துள்ளார்.

**நிறுத்துங்கள்...**

அவர் தன் எக்ஸ் தள பக்கத்தில், "இந்திய வீரர்கள் உலக சாம்பியன்ஸ் லீக் தொடரில் பாகிஸ்தான் போட்டியைப் புறக்கணித்தனர். அதைத் தேசியக் கடமை என்று வர்ணித்தனர். இப்போது பாகிஸ்தானுடன் ஆசியக் கோப்பைப் போட்டியில் ஆடுவது நன்றாக உள்ளதா? பாகிஸ்தானுடன் இதில் ஆடலாம் என்றால், சாம்பியன்ஸ் தொடரிலும் ஆடியிருக்க வேண்டுமே. எனவே, உங்களுக்குத் தேவைப்படும் போது தேசப்பற்றைப் பயன்படுத்துவதை நிறுத்துங்கள். விளையாட்டு விளையாட்டாகவே இருக்கட்டும் பிரச்சாரமாக வேண்டாம்" என்று பி.சி.சி.ஐ.-யை விமர்சனம் செய்துள்ளார்.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 28.07.2025 முதல் 03.08.2025 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி –

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் ஒத்தி வைக்கப்படலாம். சிலர், நோய் காரணமாக, வீட்டை விட்டு வெளியே வரமுடியாத நிலையில் இருப்பர். வரவேண்டிய புதிய தகவல்கள் தாமதமாக வரும். சிலருக்கு, பணமுடை காரணமாக, நாள் போவது யுகம் போவது போல் இருக்கும். வீட்டு வாடகை வசூல் தாமதமாகலாம். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்க முடியாத நிலை உருவாகலாம். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். அடிக்கடி ஏற்படும் பயணங்கள் தடைப்படும். வீடு மாற்றம் அல்லது தூரமான அல்லது விரும்பிய இடத்திற்கு மாற்றங்கள் இப்போதைக்கு இருக்காது. எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். இந்த வாரம் எல்லாம் கலப்பு பலன்களாக இருக்கும்.

பரணி -

இந்த வாரம் தனவரவு திருப்திகரமாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை. குடும்ப உறவுகளை, சந்திக்க முடியாமல் தனிமைப்பட நேரலாம். அன்றாட வாழ்க்கையில் விரும்பத் தகாதவர்களின் குறுக்கீடுகள் இருக்கும். வீடு மற்றும் வாகனத்தில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்க வேண்டியது வரும். அதனால் ஏற்படும் செலவுகள் உங்கள் கையைக் கடிக்கும். சுய முயற்சிகள் கண்டிப்பாக வெற்றிகளைத் தரும். புனித பயணங்கள் போவதற்கான வாய்ப்புகள் தாமதப்படும். சிலருக்குத் தொழிலில் இதுநாள் இருந்து வந்த ஆதாயங்கள் குறையும். எதிர்பாலருடன் சந்தோஷமான சந்திப்புகள் தாமதப்படும். எதிர்பாராத விதமாக கல்வியில் தடைகள் ஏற்படலாம். புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண முயன்றாலும், தோல்வியே அடைவீர்கள்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.-

இந்த வாரம் பூஜா வழிபாடுகள் செய்ய இயலாமல், தடை தாமதங்கள் ஏற்படும். மதிப்பு மிக்க மனிதர்களை சந்திக்க முயன்றாலும், அது நிறைவேறாமல் போகும். வீட்டை விட்டு வெளியே செல்லாதிருப்பது பிரச்சனைகளை குறைக்கும். அரசுப் பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும். ஆசைகள் நிறைவேறாத நிலை ஏற்படும்.. பெண்கள் தங்கள் செலவைக் குறைத்து சேமிப்பை உயர்த்த முற்பட வேண்டும். குறுகிய காலத்திற்கு குடும்பத்தில் சந்தோஷம் குறையும். துன்பம் மற்றும் செலவுகள் மிகுதியான பயணங்கள் தொல்லை தரும். விபத்துகள் மற்றும் காயங்களில் இருந்து தப்பிக்க உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வெற்றிக்கு முன் ஏற்படும், தடைகளும் தாமதங்களும் கண்டு மனம் பேதலிக்கும். தோல்விகளைக் கண்டு துவண்டு விடாதீர்கள்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேருவது தாமதப்படும். தனவரவு எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது. நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகை முற்றிலுமாகக் குறையும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வாய்ப்புகள் குறையும். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிய முயல்வீர்கள். பயணங்கள் தவிர்க்கப்பட வேண்டியதாகும். சிலரின் உடல் நலிவுறும். இதைக்கூட கவனிக்காமல், ஏதோ நினைவில் இருப்பார்கள். செலவுகள் அதிகரிப்பதால் பர்ஸில் உள்ள பணமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும். பெண்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீண் அலைச்சல்கள், வெட்டிச் செலவுகளும் தவிர்க்க முடியாததாகும். பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும்.

ரோகிணி –

இந்த வாரம் மடுப் போன்ற பணவரவை வைத்து, மலை போன்ற செலவுகளை சமாளிக்க முடியாமல் திணறுவீர்கள். உடலில் ஏற்படும் உபாதைகள் காரணமாக ஆஸ்பத்திரி வாசம் ஏற்படலாம். சுறுசுறுப்பு, தைரியம், ஆகியவை குறையும். வெற்றி பெறுவதற்கான தூண்டுதல்கள் இருந்தாலும் வாழ்க்கையில் முன்னேற்றங்கள் இருக்காது. தொலைதூரப் பயணங்கள், மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். எவ்வளவுதான் முயன்றாலும் சிலருக்கு தொழில் முன்னேற்றங்கள் தடைப்படும். விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும் காலம் தள்ளிப் போகும். திருமண காரியங்கள் தடைப்படும். எனவே, ஒத்திப் போடுவது நல்லது. கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். உடன்பிறப்புகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்படும்.

மிருகசீரிஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் பிடிவாதம், வாக்குவாதம் ஆகிய இரு வாதங்களால், மணவாழ்க்கை எனும் படகு ஆட்டம் காணும். ஆக்கபூர்வமான ஆலோசனை அளித்து அன்பு நண்பர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு உதவ முயன்றாலும் முடியாத நிலையே ஏற்படும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். அதுவே மனக் கஷ்டங்களுக்கு காரணமாகும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகளைத் தள்ளிப் போடுவது நல்லது. கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்க தாமதமாகும்.

## மிதுனம்

(மிருகசீரிடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசீரிஷம் – 3 , 4 பாதங்கள். –

இந்த வாரம் காய் கனிந்து பழமாவது போன்ற இனிய பயணங்களை கனவில் மட்டுமே காண முடியும். உங்கள் திறமையின் காரணமாக பொருளாதார சிக்கல்கள் சீராக்கப்படும். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமையும், உயர்வும் ஏற்படுவது தாமதப்படும். முழு மனதுடன் உங்கள் வாடிக்கையாளர்கள் உங்களுக்கும், உங்கள் நிறுவனத்துக்கும் சிறப்பான ஆதரவு நல்குவார்கள். தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படும். தாமதமான திருமணங்கள் குறைந்த அளவு கூட்டத்தோடு நடந்து முடியும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தாமதப்படும். வேலை தேடுபவர்களுக்கு, அவர்களின் திறமைக்கேற்ப நல்ல பணி கிடைக்கும் என்றாலும் ஆர்டர் வர தாமதமாகும்.

திருவாதிரை –

இந்த வாரம் உங்கள் விருப்பங்கள், அபிலாஷைகள் அனைத்தும் நிறைவேற தாமதம் ஆகும். பொருளாதார நிலை மற்றும் குடும்ப நிலை ஓரளவே சிறப்பாக அமையும். சிலருக்குப் பணி நிமித்தமாக செல்ல வேண்டிய வெளியூர் பயணங்கள் போக்குவரத்துத் தடைகளால், தாமதப்படும். பிரயாணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண இயலாது. இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரலாம். உறவுகளைப் பிரிந்து இருக்க வேண்டிய நிலை ஏற்படும். இலாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகள் கை விடுவது நல்லது. தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். மருத்துவ மற்றும் சுகாதார அரசுப் பணியாளர்களுக்குப் பாராட்டுகள் குவியும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் உங்கள் உடன் பிறப்புகள் மூலமாகத் தொல்லைகள் அதிகரிக்கும். பயணங்கள் தாமதப்படும். அதன் மூலம் நன்மைகள் குறையும். உங்கள் செயல்திறன் கூடும். பலவழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். பண பிரச்சனைகள் எழும். பிற்கால நலன் கருதி சேமிப்புக்கள், பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உயர் அதிகாரிகள் ஆதரவால் பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும். வேலைப்பளுவும் கூடும். சிலருக்கு வாகன யோகம் குறையும். கூட்டாளிகளின் நியாயமற்ற நடவடிக்கைகள் உங்கள் மனதில் குழப்பத்தை தரும். முன்பின் தெரியாதவர்களிடம் பேச்சு வைத்துக் கொள்ள வேண்டாம். குழந்தைகளின் தேர்ச்சி தாமதப்படும். விவசாயிகளுக்கு அரசின் உதவிகள் எளிதில் கிடைக்கும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழிக்கும் கனவு, கனவாகவே இருக்கும். பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவந்தாலும், திருமணம் தாமதமாகவே நடக்கும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் தாமதப்படும். விற்பனைப் பிரதிநிதிகள் வெளியில் சென்று தங்கள் பணிகளை செய்ய இயலாது. பயணங்களைத் தள்ளிப் போடுவது நல்லது. வண்டிகளில் பயணிக்கும் போது, எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சிலர், மக்கள் சேவையில் ஈடுபட்டதன் காரணமாக மக்களால் பாராட்டப்படுவார்கள். குழந்தைகளின் தாமதமான முன்னேற்றம் மனதில் கவலையை தோற்றுவிக்கும். வியாபாரிகள் புதிய வியாபார நுணுக்கங்கள் புகுத்தி ஆதாயம் காண்பது அரிது.

பூசம் –

இந்த வாரம் கையில் பண வரவு குறையும். மனதில் சில குழப்பங்கள் ஏற்படலாம். குடும்பத்தில் வீட்டிற்குள்ளேயே இருப்பதால், மகிழ்ச்சிக்குக் குறைவிருக்காது. எதையும் சாதிக்கும் திறன், நினைத்ததை நினைத்தபடியே முடிக்கும் முனைப்பும் இருந்தாலும் சூழ்நிலை காரணமாக அனைத்தும் தாமதப்படும். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். சிறந்த பொருளாதார நிலையில், மனை, வண்டி வாகனம் ஆகியவற்றை வாங்கும் முடிவை ஒத்திப் போடுவது நல்லது. வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவது தாமதப்படும்.

ஆயில்யம் –

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி சுமூகம் உருவாகும். செல்வாக்கு மிக்க நபர்கள் உதவியால், சிலருக்குப் பொருளாதார நிலைகள் உயர தாமதப்படும். சிறு தொழில் புரிபவர்களுக்கு தேவையான வங்கிக் கடன் உதவிகள் கிடைக்க தாமதமாகும். ஊரடங்கால், எடுக்கும் முயற்சிகளில் தடை,தாமதங்கள் ஏற்படும். எப்பாடுபட்டாவது வெற்றி அடைய முயல்வீர்கள். சிலருக்கு புதிய பதவிகள் தேடிவரும். அந்தஸ்து உயரும். விவசாயிகளுக்கு அரசின் மூலம் ஆதாயம் கிட்டும். ஆடம்பரச் செலவுகள் அதிகமாவதின் காரணமாகப் பணமுடை ஏற்பட வாய்ப்பு உண்டு.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். வீட்டில் சுவையான நல்ல உணவு கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத தனவரவு கிட்டும். எதிர்பார்த்த, கௌரவப் பட்டங்கள், பதவிகள் தாமதமாகும். உயர் அதிகாரிகளின் கெடுபிடியால் அதிக தொல்லைகள் ஏற்படலாம். புதிய நண்பர்களால் தொல்லைகள் எழும். சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் மற்றும் கௌரவத்தை தாமதமாகவே அடைவீர்கள்.

பூரம் –

இந்த வாரம் மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு காரணமாக இதயக் கோட்டையில், தென்றல் வீசும். மணமேடை ஏறும் மங்கல நாளும் தாமதமாகும். சிலர் வீட்டில் தனியாக இருப்பதால் பொழுதைப் போக்குவது கடினமானதாக இருக்கும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலை தொடரும். வருமானம் குறையும். அதன் காரணமாகச் சிக்கல்களும் அதிகரிக்கும். வீண் அலைச்சல்கள் ஏற்படும். பணிபுரிபவர்களுக்கு மேலதிகாரிகளின் அனுகூலத்தால் உயர் பதவிகள் கிடைக்க தாமதமாகும். எதிரிகளின் பணமும் வந்து சேரும். வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்று சொல்வதற்கில்லை.. சுற்றுவட்டாரத்தில் நல்ல புகழும், கௌரவமும் குறையும்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். ஆனால், திருமணம் தள்ளிப் போகும். மனோதைரியம் குறையும் சிலருக்கு மரண பயம் ஏற்படலாம். தொழிலில் எதிர்பார்த்தபடி பணவரவுகள் குறையும். பல வழிகளிலும் செலவுகளும் அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். கூடவே வேலைப்பளுவும் கூடும். வாகன வசதிகள் குறையும். கல்வியில் தடை தாமதங்கள் ஏற்படும். சிலருக்கு, வாக்கு வன்மை ஓங்கும். புதிய வியாபார யுக்திகள் கை விடுவது நல்லது. சிலருக்கு வீடு, மனை ஆகியவற்றால் நஷ்டங்கள் ஏற்படும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும் எனக் கனவு கூடக் கண்டு விடாதீர்கள். தாமதமானாலும், சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாமதமாகும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேர தாமதமாகும். நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மிக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், எடுத்துக் கொண்ட புதிய திட்டங்களில் எதிர்பாராத தாமதங்கள் தடைகள் ஏற்படலாம். உழைப்பு அதிகமாகி அதற்கேற்பப் போதுமான ஊதியம் இருக்காது.

அஸ்தம் –

இந்த வாரம் தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வர தாமதமாகும். சுபகாரியம் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகளை ஒத்திப் போடுவது நல்லது. சிலருக்குப் பண வருமானம் தாமதமாகும். நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக வருவாய் பெருக்கம் தாமதமாகவே. ஏற்படும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் தாமதமாகவே, தடைகளுக்குப் பிறகு, வெற்றி பெறும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலை வாய்ப்புகள் தாமதப்படும். வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்களை தள்ளிப் போடுவது நல்லது. எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேர காலதாமதமாகும். வந்த பணத்தை தரும காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள். மாணவர்களுக்கு கல்வியில் தடை, தாமதங்களுக்குப் பிறகு, தேர்ச்சி உண்டு. சிலருக்கு உழைப்புகேற்றார் போல் ஊதியம் கிடைக்காது. மருத்துவப் பணியாளர்களுக்கு பாராட்டுகள் குவியும். மக்களுக்கு அரசு ஒத்துழைப்பு கிடைக்கும். சினத்தை அடக்கி உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும் விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் நம்பிக்கைகளும், விருப்பங்களும் மனம்போல் நிறைவேறும். நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்கள் ஆலோசனைகள் ஆதாயம் தரும். வழக்கு விவகாரங்கள் தள்ளிப் போகும். அனைத்திலும் வெற்றி எதிர்பார்க்க முடியாது. சிலருக்கு, வெற்றி தாமதமாகவே சித்திக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் தாமதப்படும். பயணங்கள் மேற்கொள்ள முடியாத நிலைகள் ஏற்படலாம். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வந்தாலும், வேலைப்பளு கூடும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும்.நீங்கள் எதிர்பாராத விதத்தில் பணியில் மாற்றங்கள் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் அக்கறை கொள் வேண்டிய காலமிது.

சுவாதி –

இந்த வாரம் எடுத்த காரியங்களில் வெற்றி பெற கடின உழைப்பு தேவைப்படும். விரும்பிய பொருட்களை எல்லாம் உடனே, நினைத்தபடி வாங்க முடியாத நிலை ஏற்படும். இரக்க குணத்தால். ஆடைகள், உணவு ஆகியவற்றை பிறருக்கு தானம் செய்வார்கள். எதிர்பாராத பண வரவுகள் தாமதப்படும். ஆனால். இந்த வாரச் செலவுகளைச் சமாளித்துவிடுவீர்கள். இந்த நேரத்தில், புதுப்புது முயற்சிகளில் ஈடுபடாதிருப்பது நல்லது. சிலருக்குப் பதவிகள் உங்களைத் தேடி வந்தாலும், பணியில் பளுவும் கூடும். திருமணம் ஆகாதவர்களுக்கு கொட்டு மேளம் கொட்டும் நேரம் தாமதப்படும். புதிய சேமிப்புகளை துவங்கலாம். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்ய முடியாத நிலை உருவாகும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமாக ஆதாயத்தை எதிர்பார்க்க முடியாது.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் கல்வியில் தடை. தாமதங்கள் ஏற்படும், உயர் கல்வி சேர்க்கையில் தாமதப்படும். சூழ்நிலை காரணமாக, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு, வாகனங்களில் செல்கையில் பிரச்சனை ஏற்படலாம். அவசியமான வேலையின்றி வெளியே செல்லாதீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். சீருடைப் பணியாளர் களுக்கு வேலை பளு கூடும். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி தாமதப்படும். உங்கள் உடலில் சுறுசுறுப்பு குறைந்து, சோம்பல் அதிகரிக்கும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. புதிய தொழில் முயற்சிகள் தள்ளி வைப்பது நல்லது. சிலருக்கு அரசு உதவிகள் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் இருக்காது.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் பயணங்களில் தடை தாமதங்கள் ஏற்படும். செய்ய வேண்டும் என்று எண்ணிய காரியங்கள், செய்ய முடியாத நிலை ஏற்படும். மருத்துவப் பொருட்கள் வியாபாரம் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். விருந்துகளில் கலந்து கொள்ள நினைத்தாலும் முடியாத நிலை உருவாகும். வீட்டில் இருந்து, உண்டு, உறங்கி பொழுதை கழிப்பீர்கள். ஐ. டி பணியாளர்கள் சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். பெண்களுக்கு வீட்டு வேலைகள் சேர்ந்து கொள்ளும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். தொழில் வளர்ச்சி பாதிக்கப்படும். சிலருக்கு, வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். என்று சொல்வதற்கில்லை. அமைதியாக இருந்து வெற்றி காண முயலுங்கள். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும்.

அனுஷம் –

இந்த வாரம் புதிய தொடர்புகள் நன்மைகள் இருக்காது. செலவுகள் அதிகரிக்கும். பணவரவும் குறையும். ஏற்கனவே முடிவு செய்யப்பட்ட, சுபகாரிய நிகழ்ச்சிகள் தாமதப்படும். அனைவரும் வீட்டில் இருப்பதால், மகிழ்ச்சி பொங்கும். அரசாங்கம் தரும் பிரச்சனைகளால் கவலை எழும். புண்ணிய பயணங்களைத் தள்ளி வைக்க நேரும். போக்குவரத்துக் குறைபாடுகளால், வெகு தூர பயணங்களில் பாதிப்பு ஏற்படும். இனிய நண்பர்கள் உதவ நினைத்தால், அவர்களை சந்திக்க முடியாத நிலை உருவாகும். புதிய தொழில் தொடங்க எடுக்கும் முயற்சிகளை தள்ளிப் போடுங்கள். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் ஆதரவு இருந்தாலும், பணிச்சுமையும் அதிகரிக்கும். ஆயினும், அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை.

கேட்டை –

இந்த வாரம் பல வழிகளிலும் தனவரவு கூடும் என சொல்வதற்கில்லை. அரசு வேலை அல்லது தனியார் கம்பெனியில் உயர் அதிகாரி வேலையில் உள்ளவர்களுக்கு, வேலைப்பளு கூடும். அரசு உதவி கிடைக்க வாய்ப்பு உண்டாகும். எல்லாக் காரியங்களிலும் வெற்றி கிடைப்பது அரிது. சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். ஆனால், அதில் கலந்து கொள்ளும் பாக்கியம் இருக்காது. உங்களுக்கு மிக்க அனுகூலமற்ற வாரம். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்ய நினைத்தாலும், முடியாத நிலையே ஏற்படும். சிலருக்கு அதில் தடை தாமதங்கள் ஏற்படும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவது கடினமாகும். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைத்தாலும் பணிச்சுமை கூடும்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் பெண்களால் இலாபம் இருந்தாலும், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடத்த முடியாத சூழ்நிலை எழும். பொருளாதார நிலை எப்போதும் போல் நிலையாக இருக்காது. ஏற்ற இறக்கமாக இருக்கும். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் ஒத்திப் போடுவது நல்லது. சிலருக்கு, தொழிலில் ஓரளவு வளர்ச்சி ஏற்படும். மேலதிகாரிகளின் உதவியால் உயர் பதவிகள் கிடைக்கும். ஆயினும், வேலைப்பளு கூடும். தொழில் விரிவாக்க நிகழ்வுகளைத் தள்ளிப்போடுவது நல்லது. நண்பர்களைச் சந்திக்க முடியாத நிலை ஏற்படும்.

பூராடம் –

இந்த வாரம் தனவரவு சீராக இருக்காது. வீட்டு வேலைகள் அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சி குறையும். வீட்டு வேலைகளில் ஆண்களும் உதவுவர். ஆடைகளை வாங்கி இல்லாதவர்களுக்கு கொடுத்து மகிழ்வீர்கள். உறவுகள் உங்கள் வீட்டுக்கு, வருகை புரிய முடியாத நிலை உருவாகும். அதேபோல் நீங்கள், வெளியில் செல்ல முடியாமல் தடைகள் ஏற்படும். அன்னதானம் போன்றவற்றில் ஈடுபட நேரும். மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் பாராட்டு பெறுவர். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். வேலைப்பளுவும் கூடும். சிலருக்கு, சம்பாதிக்கும் திறன் மேம்பட்டு, கையில் காசு சேரும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் சிலருக்கு, புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவானாலும், தடை, தாமதங்களுக்குப் பிறகு காரியம் சித்தியாகும். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். சீருடைப் பணியாளர்கள், சிலருக்கு சிக்கல்கள் எழலாம். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களில் தடை, தாமதங்கள், அரசு வகையில் அபராதங்களும் செலுத்த நேரலாம். தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தி திறன் குறையும் ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4- பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் வீட்டில் இருப்பதால், குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைகள் தங்கள் இஷ்டத்துக்கு நடப்பர். சொன்ன பேச்சு கேட்க மாட்டார்கள். புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி விஷயங்கள் ஆகியவற்றைத் தள்ளிப் போடுவது நல்லது. ஊரடங்கால், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை தள்ளிப் போகும் நிலை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை ஓரளவே, திருப்திகரமான வாரமாக இருக்கும். மாணவர்களுக்கு தேர்வுகள் ஒத்தி போகலாம். கல்வியில் தடைகள் உண்டாகும்.

திருவோணம்-

இந்த வாரம் வாகன வசதிகள் சிறப்பாக அமையும். வீணாக வெளியில் அலைவதை தவிர்ப்பது நல்லது. மீறிப் போனால், சீருடைப் பணியாளர்கள் சிக்கல்கள் எழும். எனவே, வரும் முன் காப்பதே நல்லது. மனைவிக்கு, வீட்டு வேலைகளில் உதவுவீர்கள். புத்திரர்களுக்கு கல்வியில் தடை தாமதங்கள் ஏற்படும். அவர்களால் தொல்லைகள் ஏற்படும். தாய்மார்களுக்கு பொறுமை அவசியம். உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்காது.. சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். சிலருக்கு, புத்தி மங்கி அதன் காரணமாக செயல்திறன் குறையும். நல்ல பெயர் கிடைக்காது. செலவுகள் அதிகரிக்கும். உறவுகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் ஆடம்பரச் செலவுகளை குறைத்தால் பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். அதில், தடைகளும், தாமதங்களும் ஏற்படும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் பொருளாதார நிலையும் சீராகும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது சிறப்பு. பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், திருமணம் தள்ளிப் போகும். அவசியமற்ற, அலைச்சல்கள் அல்லல் தரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை ஏற்று நடக்கும்படியான சூழல் உருவாகும். வேலை அதிகரிக்கும். அதிகாரம் மிக்க உயர் பதவிகளில் உள்ளவர்கள் வீட்டுக்கு கூட போக முடியாத நிலை உருவாகும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்க முடியாது. போக்குவரத்து தடைகளால் பயணங்களை ஒத்திப் போட நேரும். வீட்டில் எப்போதும் ஓய்வில் இருப்பதால், மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும்.

சதயம்-

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும் என்று சொல்வதற்கில்லை. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புண்டு. எனவே, அனுசரித்துச் செல்லுங்கள். எதிர்காலத்தைப் பற்றிய சிந்தனைகள் கவலை அளிக்கும். பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தவிர்ப்பது நல்லது. சுக சௌகரியங்கள் ஓரளவு குறையும். சிலருக்கு மன அழுத்தங்கள் கூடும். சுபசெய்திகள் எதிர்பார்க்க முடியாது. போக்குவரத்து இடர்பாடுகளால், வெளிநாட்டுப் பயணங்கள் தள்ளிப் போகும். வாணிபத்தால் தனலாபம் எதிர்பார்க்க முடியாது. வீட்டில் அமைதியும், நிம்மதியும் குறையும். அதன் காரணமாக, மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் சுபகாரிய நிகழ்வுகள், ஏற்கனவே, குறிப்பிட்ட காலத்தில் நடத்த முடியாது தள்ளிப் போகும். வீட்டிலேயே இருப்பதால் குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். உறவுகள் வருகை குறையும். சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிலருக்கு, சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்பட்டாலும், முடிவு தாமதப்படும். அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, சந்தைப்படுத்த முடியாமல் தொல்லைகள் எழும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் அரசுத் தொல்லைகளால், தள்ளிப்போகும். புதிய நடவடிக்கைகளை ஒத்திப் போடுவது நல்லது. வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் தாமதமாகவே கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாக்கால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். அவர்களுக்குக் கணவன்மார்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தடை, தாமதங்கள் ஏற்பட்டாலும், தேர்ச்சி உண்டு. உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இருக்காது.

உத்திரட்டாதி-

இந்த வாரம் சிலருக்கு, பொன் பொருள் ஆபரணங்கள் ஓரளவு, கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே நடத்த முடியாது. அனைவரும், ஆரோக்கியம் பேண வேண்டிய சூழல் எழும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்குப் புதுப் புதுப் பதவிகள் கிடைத்தாலும், வேலைப்பளு கூடும். ஆயினும், அதனால் வருவாய் பெருக்கமும் ஏற்படும். அரசாங்கத் துறைகள் மூலம் எதிர்பார்த்த அனுகூலங்கள் யாவும் வந்து சேரும். அதிகாரிகளிடம் வாக்குவாதம் செய்தால் அபராதம் கட்ட நேரலாம். சிலருக்குத் தோல் உபாதைகள் ஏற்படலாம். மேடைப் பேச்சாளர்கள் தங்கள் பேச்சின் மூலம் வருமானம் ஈட்டுவது உறுதி.

ரேவதி-

இந்த வாரம் வீட்டில், இருப்பதால், மங்கையரால் மன மகிழ்ச்சி ஏற்படும், அரசாங்கத்தால் உதவிகளும், இலாபமும் பெறுவதில் தாமதம் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் நினைவு வரும். அவர்களைச் சந்திக்க முடியாத நிலை ஏற்படும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது பணிச்சுமை இருக்கும். அவர்களின் பணி பாராட்டு பெறும். மதிப்பும், ம,இயாதையும் கூடும். வாகன வசதிகள் குறையும். வாகனங்களை வெளியில் எடுக்க முடியாத நிலை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி ஏற்பட்டாலும், தாமதங்கள், தடைகள் உண்டாகும். இன்பச் சுற்றுலா போன்ற, பயணங்களில் தடை தாமதங்கள் ஏற்படும்.



● சென்னை அப்போலோ மருத்துவமனையில் உடல்நலக்குறைவால் சிகிச்சைப்பெற்று நேற்று இல்லம் திரும்பிய முதல்வர் மு.க.ஸ்டாலினை பொதுமக்கள், கழக தொண்டர்கள் திரளாக திரண்டு வந்து வரவேற்ற காட்சி.

# விழிப்புணர்வு இல்லாவிட்டால் உரிமைகளால் எந்த பயனும் இல்லை

## சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி

புதுடெல்லி, ஜூலை 28-
மக்களுக்கு விழிப்புணர்வு இல்லாவிட்டால் உரிமைகளால் எந்த பயனும் இல்லை என சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி கவாய் தெரிவித்துள்ளார்.

காஷ்மீரின் ஸ்ரீநகரில் நடைபெற்ற தேசிய சட்ட சேவைகள் ஆணையத்தின் வடக்கு மண்டல பிராந்திய மாநாட்டில் சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;- "நாட்டின் கடைமட்டத்தில் இருக்கும் குடிமகனுக்கும் நீதி கிடைப்பதை நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் இணைந்து உறுதி செய்ய வேண்டும். இதை நோக்கமாக கொண்டுதான் தேசிய சட்ட சேவைகள் ஆணையம் செயல்படுகிறது. உரிமைகளைப் பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு இல்லாவிட்டால், அந்த உரிமைகளால் எந்த பயனும் இல்லை.

கடந்த 35 ஆண்டுகளில் காஷ்மீர் விவகாரத்தை கையாள்வதில் சில குறைபாடுகள் இருந்திருக்கின்றன. ஆனால் அவற்றை நீக்க நாம் பாடுபட வேண்டும். இந்துக்கள், முஸ்லிம்கள் மற்றும் சீக்கியர்கள் என அனைத்து சமூகங்களும் ஒன்றாக வாழ்ந்த பாரம்பரிய காஷ்மீரை மீண்டும் கட்டியெழுப்ப இந்த திட்டம் உதவும் என்று நான் நம்புகிறேன். நாட்டின் அரசியலமைப்பின் மூலம், அரசியல், சமூக மற்றும் பொருளாதார நீதியை நாம் உறுதியளித்துள்ளோம். நீதி என்பது, அதன் உண்மையான உணர்வில் செயல்படுத்தப் படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து

# 57 ஆயிரம் கனஅடியாக அதிகரிப்பு

தர்மபுரி, ஜூலை 28-
ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து வினாடிக்கு 57 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக கேரள மாநிலம் வயநாடு மற்றும் கர்நாடக மாநில காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் விட்டு விட்டு கனமழை பெய்து வருகிறது.

இதனால் கர்நாடக மாநிலத்தில் உள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த 2 அணைகளும் முழுமையாக நிரம்பின.

இதன் காரணமாக அணைகளின் பாதுகாப்பு கருதி உபரிநீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

அதன்படி கபினி அணையில் இருந்து வினாடிக்கு 21 ஆயிரம் கனஅடி தண்ணீரும், கிருஷ்ணராஜ சாகர் அணையில் இருந்து வினாடிக்கு 23 ஆயிரத்து 878 கனஅடி தண்ணீரும் என மொத்தம் வினாடிக்கு 44 ஆயிரத்து 878 கன அடி தண்ணீர் காவிரி ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது.

இந்த தண்ணீர் கர்நாடக-தமிழக எல்லையான பிலிகுண்டுலு வழியாக தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு வந்து கொண்டிருக்கிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு 32 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 57 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

இதனால் ஒகேனக்கல் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்தருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# கங்கை தீர்த்தத்தால் சோழீஸ்வரருக்கு பிரதமர் நரேந்திரமோடி அபிஷேகம்

அரியலூர், ஜூலை 28-
முதலாம் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட புகழ்பெற்ற கங்கை கொண்ட சோழீசுவரர் கோவிலில் பிரதமர் மோடி சாமி தரிசனம் செய்தார். அங்கு கங்கை தீர்த்தம் கொண்டு வந்த பிரதமர் மோடி, சோழீஸ்வரருக்கு அபிஷேகம் செய்தார்.

தமிழகத்திற்கு 2 நாட்கள் சுற்றுப்பயணமாக பிரதமர் மோடி வந்துள்ளார். நேற்று முன்தினம் இரவு தூத்துக்குடி வந்த பிரதமர் மோடி விமான நிலையத்தின் புதிய முனையத்தை திறந்து வைத்தார். பின்னர் இரவு 10 மணியளவில் தூத்துக்குடியில் இருந்து விமானம் மூலம் திருச்சி சென்றார்.

திருச்சியில் உள்ள ஓட்டலில் இரவு தங்கிய பிரதமர் மோடி நேற்று (ஜூலை 27) கார் மூலம் திருச்சி விமான நிலையத்திற்கு சென்றார். அவர் செல்லும் வழியில் திரண்டிருந்த பா.ஜ.வினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். திருச்சி விமான நிலையத்தில் இருந்து ஹெலிகாப்டர் மூலம் அரியலூர் மாவட்டம் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு பிரதமர் மோடி சென்றார். சோழகங்கம் முதல் கங்கைகொண்ட சோழபுரம் கோவில் வரை பிரதமர் மோடி ரோடு ஷோவில் வழியெங்கும் திரண்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களை பார்த்து கையசைத்தபடி காரில் சென்றார்.

அப்போது பிரதமர் மோடி வெள்ளை நிற வேஷ்டி, சட்டை அணிந்து இருந்தார். காரின் கதவை திறந்து, நின்றவாறு பிரதமர் மோடி சாலையில் திரண்டிருந்த மக்களை பார்த்து கை அசைத்தார். முதலாம் ராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட புகழ்பெற்ற கங்கை கொண்ட சோழீசுவரர் கோவிலில் பிரதமர் மோடி சாமி தரிசனம் செய்தார். அங்கு பிரதமர் மோடிக்கு பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டது.

வாரணாசியில் இருந்து கொண்டுவரப்பட்ட கங்கை நீரை கொண்டு பிரதமர் மோடி, சோழீஸ்வரருக்கு அபிஷேகம் செய்தார். ஓதுவார்கள் திருவாசகம் பாட, தீபாராதனை காட்டி தமிழில் வழிபாடு நடத்தினார். புகழ்பெற்ற கங்கை கொண்ட சோழீசுவரர் கோவிலில், பிரதமர் மோடி கோவில் சிற்பங்களையும், தொல்லியல் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள புகைப்பட கண்காட்சியையும் பார்வையிட்டார்.



● வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை கொளத்தூர் சட்டப்பேரவை தொகுதில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் (சிஎம்டிஏ) மற்றும் நெடுஞ்சாலைத்துறை சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சி திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து நேற்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சென்னை பெருநகர் வளர்ச்சி குழும தலைவரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.



● தூத்துக்குடி நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு பிரதமர் மோடி தனி விமானம் மூலம் திருச்சி வந்தபோது விமான நிலையத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி சந்தித்து கோரிக்கை மனுவை வழங்கினார்.

# பிரதமர் நரேந்திரமோடியுடன் எடப்பாடி பழனிசாமி சந்திப்பு

திருச்சி, ஜூலை 28-
தூத்துக்குடி நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி தனி விமானம் மூலம் திருச்சி வந்தடைந்தார். அப்போது விமான நிலையத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்தார்.

பிரதமர் நரேந்திர மோடி தனது வெளிநாட்டு சுற்றுப்பயணங்களை முடித்த நிலையில், நேற்று முன்தினம் மாலை தூத்துக்குடி வந்தார். தமிழக பாரம்பரிய உடையான வேட்டி, சட்டை அணிந்து விமானத்தில் இருந்து இறங்கினார். அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரதமர் மோடியை ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர் தங்கம் தென்னரசு உள்ளிட்டோர் வரவேற்றனர்.

தூத்துக்குடி விமான நிலைய வளாகத்தில் நடைபெற்ற விழாவில் பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

அப்போது, பிரதமர் மோடி தூத்துக்குடியில் ரூ.4,900 கோடி மதிப்பிலான பல்வேறு திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார். மேலும், ரூ.450 கோடி மதிப்பில் கட்டப்பட்ட தூத்துக்குடி விமான நிலையத்தில் புதிய முனையத்தை பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

இந்நிலையில், தூத்துக்குடி நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி தனி விமானம் மூலம் திருச்சி வந்தடைந்தார். அப்போது விமான நிலையத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது தமிழ்நாடு கோரிக்கைகள் தொடர்பான மனுவை எடப்பாடி பழனிசாமி அளித்தார். இதுதொடர்பாக எடப்பாடி பழனிசாமி கூறுகையில், இது மரியாதை நிமித்தமான சந்திப்பு என தெரிவித்தார்.

## அப்துல் கலாமின் 10-ம் ஆண்டு நினைவு நாள்:

# எடப்பாடி பழனிசாமி புகழாரம்

சென்னை, ஜூலை 28-
அப்துல் கலாம் நினைவு நாளில், அவர்தம் பெரும் புகழைப் போற்றி வணங்குகிறேன் என எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாமின் 10-ம் ஆண்டு நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது.

இந்த நிலையில், அப்துல் கலாமின் நினைவு நாளையொட்டி, எதிர்க்கட்சித்தலைவர் எடப்பாடி பழனிசாமி தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டு இருப்பதாவது;

"எளிமையான குடும்பத்தில் பிறந்து, உலகம் போற்றும் மாமனிதராக உயர்ந்து, தன் அக்னிச் சிறகுகளால் பல உயரங்கள் தொட்டு இந்தியாவிற்கும் தமிழ்நாட்டிற்கும் பெரும் புகழைத் தேடித்தந்த முன்னாள் குடியரசுத் தலைவர், பாரத ரத்னா டாக்டர். அப்துல் கலாம் அவர்களின் நினைவு நாளில், அவர்தம் பெரும் புகழை போற்றி வணங்குகிறேன்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் ராஜேந்திரசோழனின் நினைவு நாணயம் வெளியிட்டார் பிரதமர் மோடி




தஞ்சை, ஜூலை 28-
பேரரசர் முதலாம் ராஜேந்திர சோழனின் நினைவு நாணயத்தை பிரதமர் நரேந்திர மோடி வெளியிட்டார் .

ராஜேந்திர சோழனின் முப்பெரும் விழா தஞ்சையில் நேற்று நடந்தது. இதில் கலந்து கொள்வதற்காக, திருச்சியில் இருந்து பிரதமர் மோடி தஞ்சைக்கு புறப்பட்டார். தஞ்சைக்கு வந்த பிரதமர் மோடி, வெள்ளை வேட்டி, வெள்ளை சட்டை, தோளில் அங்கவஸ்திரம் என தமிழக முறையிலான பாரம்பரிய உடை அணிந்து காணப்பட்டார்.

கங்கைகொண்ட சோழபுரம் கோவிலில் இறை வணக்கம் செலுத்தியதுடன், ஆடி திருவாதிரையை முன்னிட்டு, தீபாராதனை காட்டி வழிபாடும் நடத்தினார். ஆடி திருவாதிரை விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்த அவர், ராஜேந்திர சோழனின் நினைவு நாணயம் ஒன்றையும் வெளியிட்டார்.

இந்த நாணயம் ரூ.1,000 மதிப்பை கொண்டது. அதன் முன்புறம், இந்தியாவின் இறையாண்மையை அடையாளப்படுத்தும் வகையில், தமிழில், வாய்மையே வெல்லும் என பொருள்படும் வகையிலான சத்யமேவ ஜெயதே என பொறிக்கப்பட்டு உள்ளது. அதன் மேல், அசோக சின்னம் உள்ளது. இடதுபுறத்தில், தேவநாகரியில் பாரத் என்றும் வலதுபுறத்தில், ஆங்கிலத்தில் இந்தியா என்றும் பதிக்கப்பட்டு உள்ளது. அசோகா தூணுக்கு கீழே, ரூபாய்க்கான அடையாளமும், ஆயிரம் என்ற எண்ணும் பொறிக்கப்பட்டு உள்ளன.

நாணயத்தின் பின்புறம், பேரரசர் ராஜேந்திர சோழன் 1-ன் கடற்படையை காட்சிப்படுத்தும் வகையில், நாணயத்தின் மையத்தில் உருவம் பதிக்கப்பட்டு உள்ளது. இதே போன்று, பேரரசர் ராஜேந்திர சோழன் 1-ன் ஆயிரம் ஆண்டுகள் கடற்படை பயணம் என்று ஆங்கிலம் மற்றும் தேவநாகரியில் வரி வடிவில் பொறிக்கப்பட்டு உள்ளது. வட்ட வடிவில் 44 மி.மீ. விட்டம் கொண்ட இந்த நாணயம் 99.9 சதவீதம் தூய வெள்ளியால் உருவானது. 40 கிராம் எடை கொண்டது.

11-ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பேரரசர் ராஜேந்திர சோழன், தென்னிந்தியா முழுவதும் வெற்றி பெற்றதுடன், தென்கிழக்கு ஆசியாவில் கடற்படையை நிறுவி வெற்றி கண்டவர். கங்கை கொண்ட சோழபுரம் என்ற புதிய தலைநகரை உருவாக்க திட்டமிட்டார். அதற்காக கங்கையாற்றில் புனித நீரை கொண்டு வர அவருடைய ராணுவம் புறப்பட்டது. செல்லும் வழியெல்லாம் பல அரசுகளை வீழ்த்தி வெற்றி பெற்றது. பின்னர் புனித நீரை திரும்ப கொண்டு வந்து, புதிய நகரம் நிறுவப்பட்டது.

# 2-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு

**சென்னை, ஜூலை 28-**
**தமிழகத்தில் இன்று முதல் ஆக.2-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.**

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது: குஜராத் – வடக்கு கேரள கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் அரபிக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு நிலை நிலவுகிறது. மேலும் தமிழகம் நோக்கி வீசும் மேற்குதிசை காற்றில் வேகமாறுபாடு நிலவுகிறது. இதன் காரணமாக, இன்று (ஜூலை 28) முதல் 31-ம் தேதி வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய, லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இன்றும், நாளையும் ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்தில் வீசக்கூடும். ஆக.1, 2 தேதிகளில் தமிழகத்தில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.